விலை ரூபா 5.00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.


# ஈழநாடு வாரமலர்

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 21 இதழ் 120
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 4 - 6 - 1995


## கொழும்பில் தமிழர்கள் வீடுகளில் முடக்கம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் நேற்று தமிழ் மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவியதை தொடர்ந்து பெருமளவு தமிழர் வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

காலியில் கடைகள் எரிக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பில் நேற்று பல தமிழ்க் கடைகள் திறக்கப்படவில்லை. நேற்று சனிக்கிழமையாதலால் திறந்த சில தமிழ்க் கடைகளும் நண்பகலுக்கு முன்னரே மூடப்பட்டுவிட்டன

கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக, தெற்கில் இனக் கலவரத்தை தூண்ட தீயசக்திகள் முயன்று வருவதாக

(10-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு எங்கிலும் தீவிர பாதுகாப்பு

(கொழும்பு)

காலியில் தமிழர் கடைகள் எரிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு படையினரின் ரோந்து நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது,

கொழும்பில் தமிழ் மக்கள்

(10-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் அதிரடி
## ஐந்து ராணுவம் பலி

(திருமலை)

திருகோணமலை காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய மற்றொரு அதிரடித் தாக்குதலில் ஐந்திற்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் காலை திருகோணமலை திரிாய் காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளை தேடி அழித்தல் என்ற போர்வையில் நுழைந்த இராணுவ அணியொன்றின் மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இத்தாக்குதலில் 5 ற்கும் மேற்பட்ட ராணுவத்தினர்

(9ம் பக்கம் பார்க்க)



போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டு தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் போஷாக்கு புனர்வாழ்வு நிலையத்தில் ஊட்டச்சத்து அளிக்கப்பட்டு வரும் குழந்தைகள்.

## ★ இனக்கலவரத்தை தூண்ட முயற்சி

# காலியில் இருபது தமிழ் கடைகள் காடையர்களால் தீக்கிரை!

## - காலவரையற்ற ஊரடங்கு அமுல் -

(காலி)

காலியில் நேற்று முன்தினமிரவு சிங்களக் காடையர்களால் தமிழருக்குச் சொந்தமான இருபதுக்கும் மேற்பட்ட கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. தெற்கில் இனக்கலவரத்தைத் தூண்டும் நோக்கில் திட்டமிட்ட முறையில் சிங்களக் காடையர்களால் இத்தீவைப்புச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இதையடுத்து காலியில் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திம்புலாகல தேரர் ஸ்ரீ சீலாலங்கார கடந்த வாரம சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவரது இறுதிக் கிரியைகள் நடைபெறும் நேற்றைய தினம் தெற்கில் இனக் கலவரத்தை பாரிய அளவில் தூண்டும் நோக்கில் இத் தீவைப்புச் சம்பவம் திட்டமிட்ட முறையில் நிகழ்த்தப் பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

நேற்றுமுன்தினம் இரவு பத்து மணியளவில் காலிநகர்ப் பகுதிக்கு திரண்டு வந்த சிங்கள காடையர் கோஷ்டிகள் தமிழர்களின் கடைகளைத் தாக்கி அவற்றுக்கு தீவைத்தன. இத்தீவைப்புச் சம்பவத்தில் சுமார் இருபது கடைகள் முற்றுகத் தீக்கிரையாகின. இதில் சில சிங்கள கடைகளும் தீக்கிரையாகின.

தமிழ் கடைகளுக்கு காடையர்கள் தீவைத்து அட்டகாசம் புரிந்த சமயம் அங்குநின்ற படையினர் அதனை தடுத்து நிறுத்த முயலாது அதனை

[9ம் பக்கம் பார்க்க]

## இனக்கலவரத்தை தூண்ட தீயசக்திகள் முயற்சி

(கொழும்பு)

பதினேழு வருடகால இடைவெளிக்குப் பின்னர் நாட்டில் ஜனநாயக ரீதியான சமாதான சூழலை உருவாக்குவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இதற்கு நாட்டு மக்கள் ஒன்றுகூடி ஆதரவு வழங்கவேண்டு

(10ம் பக்கம் பார்க்க)

## ★ ராஜீவ் கொலை விவகாரம்:

## பிரபாவை ஒப்படைக்க இந்தியா இலங்கை அரசிடம் கோரிக்கை

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனையும், அவரின் மற்றைய இரு சகாக்களையும் கைது செய்து நாடு கடத்துமாறு இந்தியா இலங்கையிடம் உத்தியோகபூர்வமாக கோரியுள்ளது.

இதற்காக இந்தியா நேற்று விசேட தூதவர் ஒருவரை

(9ம் பக்கம் பார்க்க)


அழகுசாதன அன்பளிப்பு, விளையாட்டு, பிளாஸ்டிக் பொருள்களையும் மணிக்கூடு, றேடியோ, பொலித்தீன் வகைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

ஜெயா அழகு மாடம்

187, 177 ஏ, இராசன் வீதி, (மின்சார நிலைய வீதி),
யாழ்ப்பாணம்.

(ஏ-4964)

## வரி விளம்பரம்

### தேவை

பழைய பித்தளை, அலுமினியம் உயர் விலைக்கு வாங்கப்படும். விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்; சிவன் மாடம். 166, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-1495)

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரைப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1489)

### 02 – 06 – 95ல் சனி மாற்றம்

எங்கும் விற்பனையாகின்றது ரூபா 10/- யோகர் சுவாமிகளின் தெய்வீக வரலாறும் அடங்கியது. (ஆத்ம ஜோதி திரு. நா. முத்தையா எழுதியது.) சனி மாற்றம் கணிப்பு துர்க்கா ஸ்ரேசனர்ஸ் சுன்னுகம். (சி-1501)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு மருதம்கோழிப்பண்ணை, பலாலி வீதி, திருநெல்வேலி. (ஏ-4956)

## "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்"

நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே. அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. ( புல 3 : 22 )

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன்வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். ( அப். 16 : 31 )

கர்த்தர் செய்த எல்லா நன்மைகளுக்காகவும். எங்கள் குடும்பத்தினர் யாவரும் எங்களை தாழ்த்தி கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம்.

ஒரு விசுவாசக் குடும்பம்

(சி-1503)

## தமிழீழ மாணவர் எழுச்சி நாள் யூன் - 6

எம் இளைஞர் கல்விக்கு வேட்டு வைத்த
சிறிமாவின் மகளே !

பாரிசில் எங்களுக்கு பட்டதாரி படிப்பு
வேண்டாம்

ஈழ மண்ணில் எங்கள் மாணவரை கற்கவிடு.

★ மாணவர்களே
எழுந்திடுவீர்கள்
புதுயுகம் படைப்பீர்

பளை றோ. க. த. க. பாடசாலை – பளை

(ஏ-4976)

## இன்று

(கொழும்புத்துறை)

தொல்புரம் சர்வோதய நிலைய மண்டபத்தில் வட இலங்கை சர்வோதய அங்கத்துவப்பிள்ளைகளின் ஆத்திசூடி கொன்றை வேந்தன் வாக்குண்டாம் மனனமுற்றோதல் நிகழ்வு இன்று 4ம் திகதியும் 10ஆம் திகதி 17ஆம் திகதி 18 ஆம் திகதி களிலும் இளைப்பாறிய அதிபர் நா. முருகையா தலைமையில் நடைபெறும், 154

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

திரு ந, கிருஷ்ணலிங்கம் எழுதிய செவ்வரத்தம்பூ சிறுகதைத் தொகுதிநூல் அறிமுக விழா நாவலர் கலாசார மண்டபத்தில் இன்று 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 4-00 மணிக்கு யாழ். பிரதேசத்திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

ஃ ஃ ஃ

(கொழும்புத்துறை)

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்து மாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை10-00 மணிக்கு விசேஷட அபிஷேகம் பூசை ஆராதனை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி நடைபெறும்,

பத்துத்தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் தினமும் தெய்வீக உரையும் நடைபெறும், தேர் திருவிழா 13ஆம்திகதிகாலையும் தீர்த்தக்திருவிழா, பிற்பகலும் இடம் பெறும், 154

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அரச சேவையிலும் மற்றும் மாகாண அரசாங்க சேவையிலும் சிறுபணி செய்பவர்களை பொது எழுதுனர் சேவை வகுப்பு II ஆ பிரிவுக்கும் தட்டெழுத்தாளர் சேவையின் வகுபபு II ஆ பிரிவுக்கும் நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரிட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை 10ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் மாவட்டச் செயலகத்தில் நடைபெறும். 162-சி

## தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியம்

யாழ்ப்பாணம்.

## விசேட அறிவித்தல்

15 – 05 – 1995இல் உதயன் பத்திரிகையில் ஐயா சச்சிதானந்தத்தினுல் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பாக பின்வருவனவற்றை அறியத்தருகின்றேன்.

1. 01 - 04 - 1995இல் கூடிய நிர்வாகசபைக் கூட்டத்தில் நிர்வாகசபையினுல் எடுக்கப்பட்ட — "ஒன்றியத்தினுல் நடத்தப்பட்டு வரும் பயிலரங்கு கருத்தரங்குகளை தற்காலிகமாக நிறுத்திவைப்பதென்ற முடிவை" — 02 - 04 - 95இல் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் பொதுச்சபை ஏகமனதாக நிராகரித்தது.

   பொதுச்சபையில் தொடர்ந்தும் ஆய்வரங்கு, பயிலரங்குகளை நடாத்தவேண்டுமென்ற ஏகமனதான தீர்மானத்தின்படி தொடர்ந்தும் ஆய்வரங்கும், பயிலரங்கும் நடைபெறுகின்றன.

2. இதற்குப்பின் நிர்வாகசபைக்கூட்டம் இன்றுவரை நடைபெறவில்லை.

3. 18 - 04 - 1995 "உதயன்" பத்திரிகையில், 16 - 04 - 95இல் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் ஐயா சச்சிதானந்தத்தை செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதற்காக டாக்டர் வ. சிவராசா அவர்களை தற்காலிகச் செயலாளராக நியமித்தமை பற்றி அறிவித்திருந்தோம்.

4. மேற்படி நியமனம் பற்றி பதிவுத்தபால் மூலம் ஐயா சச்சிதானந்தம் அவர்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

5. 15 - 05 - 95 உதயன் பத்திரிகையில் தலைவர் ஐ. வைத்தியநாதர் அவர்களை நீக்குவது என்பது நிர்வாகசபையின் ஏகமனதான முடிவு எனவும், ஐயா சச்சிதானந்தம் தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் செயலாளர் எனவும் பத்திரிகையில் ( உதயன் ) தெரிவிக்கப்பட்ட விளம்பரம் முற்றிலும் பொய்யான தகவல் என்பதை அறியத்தருகிறோம்.

சி. பத்மநாதன்,
உப தலைவர்.

உயர்கலைக் கல்லூரி,
ஆனைப்பந்தி. [சி 496]

முகூர்த்தப் பட்டுப் பிடவைகள்
கூறைச் சேலைகள், பட்டு வேட்டிகள்
தெரிவு செய்ய நாடுங்கள்

## கணேசன் பட்டுச் சோலை

(மொத்த, சில்லறை வியாபாரம்)

201, காங்கேசன்துறை சாலை
யாழ்ப்பாணம்.

ஏ-4967

கோண்டாவில் தில்லையம்பதியில்

## (இன்று) இரண்டாம் திருவிழா



ராகம்: ஆனந்தபைரவி
தாளம்: ஆதி
பல்லவி
தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே
தொல்லைகள் தீர்ப்பாயம்மா-தேவி
அனுபல்லவி
எல்லையில்லா அருளை அள்ளித் தருபவளே
இல்லையே வேறுகதி நல்ல நகர் கோண்டாவில்
தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே
தொல்லைகள் தீர்ப்பாயம்மா-தேவி
ஆக்கம்:
கவிமணி ந. வீரமணிஐயர்

இரவு 7–30மணி
தாளம்பூ பெற்ற சாபம்
என்னும் பொருள் பற்றி
சிவநெறித் தொண்டன்
செ. சத்தியமூர்த்தி
[ஆசிரியர்]
சமயச்சொற்பொழிவு நிகழ்த்துவார்

(ஏ 4971)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995–06–04**

ஞாயிறு இரவு

08-02 இசையரங்கம்— நிகழ்ச்சியில் பிரம்மஸ்ரீ மோகன் சர்மா அவர்களின் வயலின் கச்சேரி இடம்பெறும்.
08-30 செய்திகள்
08-40 கடந்த 27-05-95 அன்று மட்டக்களப்பு நரவைக்குளம் இராணுவ முகாம் முற்றுக தாக்கி அழிக்கப்பட்ட வீரசாதனையை யொட்டிய சிறப்பு நிகழ்ச்சி— குலேந்திரன் எழுதிய "மறப்போமா நினைப்பதற்கு"

**1995–06–05**

திங்கள் காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995–06 -04**

ஞாயிறு மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 மழலைகளுக்காக
05-30 கதம்பம்
06-00 சிந்தனைக்குச் சிலவிநாடிகள்
06-02 உங்கள் தெரிவு
06-30 நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

கனி வளம் பெருக்கி
பிணிதனைக் குறைப்போம்

யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்

# சீலாலங்கார தேரர்

# சந்திரிகா - அனுருத்த

கடந்த 26-5-95 அன்று மாத்தறை கித்தலகம சிறி சீலாலங்கார நாயக்க தேரர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அவரது கொலை மர்மமாக உள்ளது. இருந்தாலும் இந்த பிக்குவையும் அவரது பின்னணியையும் சிறிது ஆராய்வது நல்லது.

சீலாலங்கார நாயக்கதேரர் ஒரு சீலரா? இல்லவேயில்லை. தங்களது சாய்மனைக் கதிரைகளில் வீற்றிருந்துகொண்டு பௌத்த பேரினவாத 'தத்துவ ஞானங்களை' போதிக்கும் மல்வத்த அஸ்கிரிய பீடாதிபதிகளைப் போலல்லாது பௌத்த பேரினவாதத் தத்துவத்தை நடைமுறைப்படுத்தும் பேரினவாதிகளில் முதன்மையானவரே இந்த இறந்த பிக்கு. தனது தமிழின ஒழிப்பு கொள்கையில் வக்கிரமமான முறையில் பற்றுவைத்து தமிழ் மக்களின் பிரதேசங்களில் அவர்களின் நிலங்களை வன்முறை மூலமும் பின்னர் அரச ஆதரவுடனும் பறித்து சிங்களக் குடியேற்றங்களை ஸ்தாபித்தார். ''இந்தச் சீலாலங்காரத்தேரர் இது நீண்ட கால தொலை நோக்குடன் செய்யப்பட்ட குடியேற்றமாகும்.

### அதிதீவிரவாதி

திம்புலாகல பகுதி பொலநறுவைமாவட்டத்தையும் மட்டக்களப்பு மாவட்டத்தையும் பிரிக்கும் எல்லையில்உள்ளது. தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமான திருகோணமலை பொலநறுவைப் பிரதேசங்களிலிருந்து மட்டக்களப்புக்கு செல்லும் பாதையில் இக்குடியேற்றம் சீலாலங்காரராவால் செய்யப்பட்டது. தமிழர் பிரதேசங்களுக்கிடையே குறுக்கு வேலி போட்டது போன்ற செயலாகும். இந்தத்தேரரின் அதிதீவிரத்தன்மை ஒரு கட்டத்தில் ஜே. ஆர். ஜயவர்த்தனவினுல்கூடத் தாங்கமுடியாதுபோன காரணத்தால இக்குடியேற்றத்தில் உள்ள நூற்றுக்கணக்கான கொட்டில்கள் இலங்கை இராணுவத்தின் ஒரு பிரிவினுல் எரித்து அழிக்கப்பட்டது.

### மேலான அதிகாரம்

சிறி சீலாலங்காரத்தேரர் இறக்கும்போது அவருக்கு வயது 71. இவர் ஐ. தே. கட்சியினரின் பதினேழு வருட கால ஆட்சியில் ஒரு மந்திரிக்கு இல்லாத அளவுகூடிய அதிகாரத்தைக் கொண்டிருந்தார். அது அவர் பௌத்த பேரினவாத, தமிழர் நிலங்களை அபகரிக்கும் செயல்களில் ஈடுபட்டதனுல் அவருக்குக்கிடைத்த கைமாருகும். அவருக்கு தற்போதைய அரசாங்கம் வழங்கிய பாதுகாப்புகளிலிருந்தும் இதை அறியலாம்,

மல்வத்த அஸ்கிரிய பீடாதிபதிகள் தங்கள் அஞ்சலிச் செய்திகளில் சிறிசீலாலங்கார தேரர் சிங்கள மக்களிடையே முன்னேடி என்று வர்ணித்துள்ளனர். ஆம், அவர் ஒரு முன்னேடிதான் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களை அவர்களிடமிருந்து பிரித்தெடுத்து சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கி அருகருகே அமைந்த தமிழ்ப் பிரதேசங்களுக்கு இடையே குறுக்கு வேலி அமைத்த ஒரு முன்னேடிதான். அதற்கு அவருக்கு அரச ஆதரவு இருந்தது. அதிரடிப் படையினரின் பாதுகாப்பு இருந்தது. பிக்கப் வாகனங்களும் வழங்கப்பட்டிருந்தன!

**வார சாரம்**

ச. தியாகராசா

### சந்திரிகாவின் அனுதாபம்

தேரரின் மரணம் பற்றி பூரண விசாரணை நடத்துமாறு ஜனுதிபதி சந்திரிகா உத்தரவிட்ட தன் பேரில் விசேட பொலிஸ் குழு ஒன்று இம்மரணம் சம்பந்தமான விசாரணைகளை நடத்துவதற்காக பொலிஸ்மா அதிபரால் அனுப்பப்பட்டுள்ளது. அந்தளவுக்கு தமிழ்பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றத்தை முன்னின்று நடத்திய தேரருக்கு சந்திரிகாவும் தன்னளவிலான பௌத்த பேரினவாத அனுதாபத்தையும் அக்கறையையும் காட்டியுள்ளார். இப்படிப்பட்ட சந்திரிகாதானு தமிழர் பிரச்னையை சுமூகமாக தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் தீர்த்துவைக்கப்போகிருர்.

### உதிரிக் குழுக்கள்

இதே சந்திரிகாதான் தமிழர்களுக்கு ஏதோ இந்தியா மாதிரியான அரசியல் நிர்வாக அமைப்பை வழங்கப்போகிருவாம். இதுபற்றி கொழும்பில் இருந்து இயங்கும் உதிரித் தமிழ்குழுக்களுக்கு ஏதோ விளக்கம்கொடுத்துள்ளாராம். தங்களைப் பொருட்டாகப் பேணி அழைத்ததற்கே காலில் விழுந்து கும்பிடக்கூடிய நிலையில உள்ள உதிரிகள் அல்லது குழுக்கள் என்ற பதங்களுக்கே லாயக்கற்ற அவர்களும் ஏதோ தாங்களும் அபிப்பிராயத்தை கூறினுர்கள் என்ற வகையில தோற்றமளிக்கக் கூடியவாறு சில முணுமுணுப்புகளுடன் ஆமாம் சாமி போட்டும் இருக்கிருர்கள். தெளிவற்ற நிலையில் எழுத்தில் பதியப்படாத ஒன்றைக்கூறிமேற்குறிப்பிட்ட நபர்களை ஏமாற்றலாம் என்ற நம்பிக்கையுடன் சந்திரிகா செயல்பட்டுள்ளார். ஆனுல் இது தமிழ் மக்களை ஒருபோதும் திருப்திப்படுத்தமாட்டாது என்பது திண்ணம். அவர்கள் எத்தனையோ உறுதிமொழிகள், வாக்குறுதிகள் அதிலசிலஎழுத்திலும் பொறிக்கப்பட்டவை. இவற்றையெல்லாம் கண்டவர்கள் சிங்களத் தலைமைகளால் காலாகாலமாக ஏமாற்றப்பட்டவர்கள் ஒருபோதும் மசிந்துகொடுக்க மாட்டார்கள். அவர்களை கொழும்பிலுள்ளவர்கள் பிரதிநிதித்துவம் செய்யவும் முடியாது.

### பேச்சுவார்த்தை

சந்திரிகாவுக்குத்தான் எந்த வகையிலும் சளைத்தவரலல என்ற பாணியில் அனுருத்த ரத்வத்தையும் அநுரா பண்டாரநாயக்காவின் நிசப்தத்தின் மத்தியில் தன்னுடைய நிலையை பலப்படுத்திக்கொள்ளலாம் என்ற நப்பாசையில் அதுவும் உயர்மட்ட படை அதிகாரிகளின் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளவேளையில் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை என்ருல் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கைவிட்டு அவற்றை கீழே வைத்த பின்னரே நடக்குமென்று ஒரு மேலாண்மை நிலையிலிருந்து கதைபேச ஆரம்பித்துள்ளார் இது அவர் கடந்த கால வரலாற்றை புரிந்துகொள்ளவில்லை என்பது ஒரு காரணமாயிருக்கலாம் அல்லதுகடந்த பதினேழு வருடகால ஐ. தே. கட்சியின் ஏதேச்சாதிகார ஆட்சிக்கு பயந்து உயிர் தப்பி இருந்தாலே போதும் என்ற நிலையில ஒழித்திருந்த காரணத்கால் சில சமயங்களில் யோசித்துப்பேசும் தன்மையை இழந்தும் இருக்கலாம்.

நமது நோக்கு

## தோல்வி மனப்பான்மை

இந்திய இராணுவத்தை அழைத்து புலிகளை தோற்கடிக்கவேண்டும் —இது கண்டி மாவட்ட ஐ. தே. கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகமவின் கூற்று.

ஜனுதிபதி சந்திரிகா, எமக்கு போர்க்களத்துக்குச் சென்று போரிட அனுமதியும் பயிற்சியும் வழங்கினுல் எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்து போரிட நான் முன்வருவேன். இது கண்டி மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் வில்சன் குறுப்பு ஆராய்ச்சியின் வீராவேசம்.

பொதுவான அடிப்படை பௌத்த சிங்கள இனவாதக் கொள்கைகளைக் கொண்ட ஐ. தே. கட்சியினரும் சு. கட்சி அங்கத்தவர்களும் இவ்வாறு பிரகடனம் செய்வது புதினமல்ல. ஆனுல் ஒரு காலத்தில் தமிழர் பிரச்சினையில் விஜயவீராவுடன் முரண்பட்டு தீவிர சமத்துவ வாதியாக இனங்காட்டி ஜே, வி. பி.க்குச் சமனுன ஒரு அமைப்பை எழுபதுகளின் முற்பகுதியில் கட்டியமைத்து அமெரிக்கன் தூதரகத்துக்குள் ஊர்வலமாகச் சென்று அங்குள்ள பொலிசாருடன் மோதி ஒரு உதவிப் பொலிஸ் சுப்பிறின்டனைக் கத்தியால் குத்தி கொலைசெய்ததாக குற்றம்சாட்டப்பட்டவரான ஜி. ஐ. தர்மசேகரா இப்போது கூறியுள்ளது தான் வியப்பானதாக இருக்கிறது.

அரசாங்கம் விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராடுவதற்கு ஆறு மாத காலத்திற்குள் தற்கொலைப் படை ஒன்றை அமைத்துக் கொடுக்க முடியும் என்று தர்மசேகரா கூறியுள்ளார். இவையெல்லாம் தங்களை ஒரு காலத்தில் இடதுசாரிகளாகக் காட்டிக்கொண்டவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது வியப்புக்குரிய விடயமுமில்லைத்தான்.

ஆனுல் இவ்விதமெல்லாம் சிங்களவர் மத்தியில் கருத்துகள் வெளிவர அடிப்படைக் காரணம் என்ன? தோல்விதான் காரணம். அடுத்து அடுத்து சிங்களப் படைகளுக்கு ஏற்படும் தோல்வியினுல் சிங்கள நாடு துவண்டு போய்நிற்கிறது.

சிங்களவர்கள் மத்தியில் உள்ள இந்த தோல்வி மனப்பான்மை அவர்கள் மத்தியில் வாழும் தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரமாக்கவும் எத்தனிப்புகள் நடந்து கொண்டிருக்கின்றன. எது எவ்விதமாஞலும் தமிழர்களைப் பொறுத்தளவில் விடிவு விரைவில் மலரும்.

# கொழும்புப் பத்திரிகைளின் நப்பாசை

சிங்கள இனவாதத்தையே போதித்துக்கொண்டிருக்கும் கொழும்பிலிருந்து வெளியாகும் சில ஆங்கிலப் பத்திரிகைகளில்சென்றவாரம் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கட்டுரைகளிலிருந்து சில பகுதிகளை இங்கே தருகிருேம்.

### ஜெகான் பெரேரா

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் இத்தனை வருடங்கள் இழுபட்டுக்கொண்டே போவதற்கான காரணம் என்னவென்ருல் பல காரணங்களுக்காக அரசாங்கம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பதாகும். சேர்ச்சில் ஜெர்மனியருக்கெதிராகவோ அல்லது அமெரிக்கா ஈராக்கிற்கு எதிராகவே யுத்தம் செய்தது போல ஒன்றுக்கும் தயங்காது யுத்தம்செய்ய ஸ்ரீலங்கா அரசு கருதினுல் 13 ஆண்டு யுத்தம் ஒரு சில மாதங்களுள் முடிந்துவிடும் என்பதில் சந்தேகம்கொள்வதற்கு எந்தக்காரணமுமில்லை. ஜெர்மன் நாட்டுக்கு எதிராகப் போரிட்ட இங்கிலாந்து நாடு ஆயிரக்கணக்கான தடவைகள் குண்டு வீச்சு விமானங்கள்மூலம் பல ஜெர்மன் நகரங்களை மிக மோசமாக அழித்துள்ளது.

பெரிய மேதாவிபோல தமிழர்களுக்கு இருக்கக்கூடிய குறைகளையும் அமைதியையும் எவ்வாறு ஏற்படுத்தலாம் என்றெல்லாம் தமது கட்டுரையில் ஆராய்ந்திருக்கும் இவர் தமிழீழத்தை அழித்துத்தன்னும் சிங்கள ஆதிக்கத்தை நிலைநாட்டவேண்டுமென்கிற தனது உள்ளக்கிடக்கையை மறைக்க முடிவதில்லை.

### ஒரு இராணுவ ஆய்வாளர் (ஐலன்ட் பத்திரிகை)

புல்மோட்டைஇராணுவ முகாமில் வானெலித் தொடர்பில் கடமையிலிருந்த சிப்பாய் காலை 12.35க்குக் கிடைத்த செய்தியால் அதிர்ச்சிக்குள்ளானுர்.

தனது இராணுவ முகாம் தாக்குதலுக்குள்ளானது என்று கல்லருவ முகாமிலிருந்த சிப்பாய் ஒருவர் பதட்டத்துடன் கூறிக்கொண்டே இருக்கும்பொழுது வானெலி தொடர்பற்றுப் போயிற்று. ஏன் தொடர்பு நின்றதென்பதற்கு மூன்று காரணங்கள் இருக்கக்கூடும். வானெலிசேதமுற்றிருக்கலாம். கதைத்த சிப்பாய் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது 40பேர்கொண்ட அந்தச் சிறியஇராணுவமுகாம் முற்ருக அழிக்கபபட்டிருக்கலாம்.

வடக்குக் கிழக்கு பூராவும் இராணுவ முகாம்கள் உசார்படுத்தப்பட்டன முல்லைத்தீவிலிருந்து திருகோணமலைவரையிருந்த இராணுவ முகாம்கள் மோசமான ஒரு சூழ்நிலையை எதிர்கொள்ள ஆயத்தமாகின.

ஆனுல் விடுதலைப் புலிகள் பாதைகளில் கண்ணி வெடிகளைப் புதைத்துவிட்டுத் திடீர்த் தாக்குதலுக்குக் காத்திருப்பார்களென்ற பீதியினுல் விடியும்வரை எவரும் கல்லருவ முகாமின் உதவிக்கு வெளியே வரவில்லை. விடிந்து வெகு நேரத்தின் பின்புதான் முதல் இராணுவ அணிகள் திரியாயிலிருந்து கல்லருவ போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் பார்த்தபோது இராணுவ முகாம் முற்ருக எரிக்கப்பட்டிருந்தது. ஆனுல் அவர்களுக்கு என்ன ஆச்சரியமாக விருந்ததென்ருல் இறந்தஇராணுவத்தினரின் உடல்களையோ காயமுற்ற இராணுவத்தினரையோ காணமுடியவில்லை.

(9ம் பக்கம் பார்க்க)

சுவையோ சுவையென நாவில்
சுவை ருசித்திட ஐஸ்கிறீம் வகைகளுக்கு
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
லிங்கம் குளிர்களி நிலயம்
( கூல்பார் )

[2]

> சிங்கள இரஜதந்திரத்திற்குள் பலியான கைத்தொழில் அபிவிருத்தி
>
> என்ற தலைப்பில் கடந்த ஆண்டு மு. தி.வினல் எழுதப்பட்டிருந்த நூலுரு ஞாயிறு இதழில் தொடர் கட்டுரையால் பிரசுரமாகிறது. [ஆ-ர்]

# தீவுகளின் இராஜகுமாரி எப்படி இந்துசமுத்திரத்தின் பிச்சைக்காரியானாள்

வெள்ளைத் துரைமாரும், துரைத்தனம் கொண்ட சிங்களவரும் இணைந்து தமக்கிடையே இலங்கைத்தீவை மிகச் சுமுகமாகப் பங்குபோட்டுக் கொண்டமைதான் சுதந்திரத்தின் சாராம்சமாய் அமைந்தது.

இரண்டாம் உலக மகாயுத்தத்துடன் பிரித்தானிய ஏகப் பெருவல்லரசு என்ற அந்தஸ்தை முற்றிலும் இழந்தது. அந்த இடத்தில் ஐக்கிய அமெரிக்கா, சோவியத யூனியன் என்றும் இருபெருவல்லரசுகள் தோன்றின. இவ்விரு பெருவல்லரசுகளும் தமக்கிடையேயான ஆதிக்கப் போட்டியின் நிமிர்த்தம் உலகநாடுகளைத் தமக்கிடையே அணிதிரட்டின: அமெரிக்கா தலைமைதாங்கும் 'நேட்டோ' அணியின் பக்கம் பிரித்தானியா முற்றிலும் இணைந்துகொண்டது. இதனால் இலங்கை அரசு பிரித்தானியாவுக்கும் அதன் அணியான 'நேட்டோ' வுக்கும் விசுவாசமாய் செயற்படலாயிற்று. இந்த விசுவாசத்தின் அடிப்படையிலேயே இலங்கையின் வெளியுறவுக்கொள்கை உதயமாகியது. உண்மையில் சொல்வதென்றால் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையென்பது பிரித்தானியாவின் வெளியுறவுக் கொள்கையாகவே அமைந்தது.

சேனநாயக்காவின் அரசியற் பொருளாதாரத் திட்டமானது ஒரு புறம் ஏகாதிபத்திய அரசியற் பொருளாதாரத்துடன் கைகோத்து நின்றதுடன் மறுபுறம் இடதுசாரி எதிர்ப்பு, தமிழின எதிர்ப்புஎன்பவற்றையும் கொண்டதாய் அமைந்திருந்தது. ஏகாதிபத்திய பொருளாதார நலன்களுக்கான கதவுகள் அகலத் திறந்துவிடப்பட்டிருப்பதுடன் உள்நாட்டு உற்பத்தியைப் பொறுத்தவரையில் அடிப்படையில விவசாய உற்பத்தியை பிரதானப்படுத்தியதாகவே இருந்தது. உள்நாட்டைக் கைத்தொழில்மயப்படுத்தும் திட்டத்திற்கு ஐ. தே. க. தயாராய் இருக்கவில்லை. "சேனநாயக்கா கைத்தொழில் அபிவிருத்தியில் நம்பிக்கை வைக்கவில்லை" என்று திரு. என். சண்முகதாஸன் கூறியுள்ளமையும் கவனிக்கத்தக்கது.

கைத்தொழில் மயப்படுத்தலான தென் இலங்கையில் இடதுசாரிகள் வளர வாய்ப்பேற்படுமென சேனநாயக்கா நம்பினார், முதலாவது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைமை இடதுசாரிகளின் கைக்குப்போயிருந்தது. இடதுசாரிகளை எதிர்கொள்ளலும் அவர்களை ஆட்சிக்கு வரமுடியாமற் தவிர்ப்பதுமே அன்று ஐ. தே. க.வின் பிரதான உள்நாட்டு அரசியற் பிரச்சனையாயிருந்தது. திருமலை கட்டுநாயக்கா தளங்களிலிருந்த பிரித்தானியப்படைகள் அவர்கள் இருக்கும் தளப்பிரதேசங்களுக்கு வெளியே நடமாடக்கூடாதென்றும் அவர்கள் அவ்வாறு வெளியில் நடமாடுவார்களேயானல் அது இடதுசாரிகளும், இ. தொ. க.வினரும், சில சுயேட்சை உறுப்பினர்களும் ஒன்றுகூடி ஒரு மகாநாட்டை நடத்தினர். இது 'ஜமுனு மகாநாடு' என அழைக்கப்படும் சிறிநிஸங்க தலைமையிலான அரசாங்கம் அமைப்பதற்குத் தாம் தயாரில்லை என்றும், தொழிலாளர்

ளாதார அரசியற் கொள்கையை அடிப்படையிலிருந்தே கட்டியெழுப்பவல்ல மூலோபாயங்களை வகுத்துச் செயற்பட்டார். அத்தகைய மூலோபாயங்களில் ஒன்றுதான் கைத்தொழில் மயமாக்கலைத் தவிர்த்தலாகும்.

நகர்ப்புறம்சார்ந்த தொழிற்சங்கங்கள் ஏறக்குறைய இடதுசாரிகளின் வசமே இருந்தன. தொழிலாளர்கள், உத்தியோகத்தர், கொம்பனி வேலையாளர் எனப் பல தரத்தினரையும் கொண்ட பல்வேறு தொழிற்சங்கங்களை இவர்கள் தம்வசம் வைத்திருந்தனர். மலையகத் தொழிலாளர் மத்தியக்கா உணர்ந்திருந்தார் என நம்பலாம் இதனால்தான் கைத்தொழிற் பொருளாதாரத்திற்கன்றி விவசாயப்பொருளாதாரத்திற்கான கொள்கையை ஐ. தே. க. வகுத்துக்கொண்டது.

சேனநாயக்கா, டொனமூர் அரசியலமைப்பில் விவசாய அமைச்சராக இருந்தார். பின்பு சோல்பரி அமைப்பின் கீழ் தனது மகன் டட்லி சேனநாயக்காவை விவசாய அமைச்சராக்கினர். தொழிலாளர் வர்க்கத்திற்குப் பதிலாக விவசாயிகள்வர்க்கத்தை வளர்ப்பதும் விவசாயிகளிற்

சாரிகளின் வளர்ச்சிக்கு வழிவகுத்துவிடுமெனவும் எனவே அவர்கள் அவர்களுக்குரிய தளம் இருக்கும் பிரதேசத்துக்குள்ளேயே சுருங்கி இருந்திட வேண்டுமென்பதிலும் சேனநாயக்கா கண்டிப்பாய் இருந்தார் என்பதை திரு டென்ஸில் பீரிஸ் தனதுநூலில் எடுத்துக் காட்டியுள்ளார். இது இரண்டு உண்மைகளைக் காட்டுகிறது. ஒன்று, இலங்கைக்குச் 'சுதந்திரம்; கொடுக்காது விட்டிருந்தால் விடுதலைப் போராட்டம் எவ்வளவு இலகுவாக வளர்ந்திருக்க முடியும் என்பதையும்- மற்றையது, இடதுசாரிகளைப் பொறுத்து சேன வர்க்கத் தலைமையை முழுமையாகக்கொண்ட ஓர் அரசாங்கமே தமது கொள்கை என்றும் கூறி இடதுசாரிகள் ஆதரவளிக்க மறுத்து சேனநாயக்கா அரசாங்கம் அமைக்க வழிவிட்டுக் கொடுத்தனர். அதாவது இடதுசாரிகளின் இச்செயலால் சேனநாயக்கா சுயேட்சை உறுப்பினர்களின் ஆதரவுடன் அரசாங்கத்தை அமைக்க முடிந்தது. சிறிநிஸங்க தலைமையில் அரசாங்கம் அமைக்கப்பட்டிருந்தால் அதில் சமசமாஜிகளே பிரதான அங்கமாய் இருந்திருப்பர். அப்போது அரசாங்கம் அமைக்கக்கூடிய

யிலும் இவர்களுக்குக் கணிசமான அளவு தொழிற்சங்கப் பலம் இருந்தது. குறிப்பாக வேலைநிறுத்தங்களினால் நாடுபூராவும்தேவையானவிநியோகங்களை ஸ்தம்பிக்க வைக்கக் கூடியதும் ஏற்றுமதி இறக்குமதிகளை ஸ்தம்பிக்க வைக்கக் கூடியதுமான ஆற்றல் இடதுசாரிகள்வசமே இருந்தது. இதனால் இடதுசாரிகளுக்கு அரசு அஞ்சியது. இடதுசாரிகள் சரிவர தங்கள் வேலைநிறுத்தங்களை ஒழுங்குபடுத்தி ஒருங்கிணைப்பார்களேயானல் இது அவர்களால் முடியக்கூடிய காரியமே. 1953ஆம் ஆண்டு ஹர்த்தாலை முன்னின்றுநடாத்

கான தலைமை தமது குடும்பத்தின் கையில் இருப்பதும் தமக்குப் பலவகை அனுகூலங்களைக் கொண்டதாகும என சேனநாயக்கா எண்ணியிருந்தார் எனக் கருதப்படுகின்றது: விவசாயிகள் தொழிலாரைப்போல ஒரு தொழிற்சாலையில் தினமும் கூடுபவர்கள் அல்ல; உதிரியானவர்கள். விவசாயிகள் சிதறுண்டு நிலங்களோடு பின்னிப் பிணைந்திருப்பவர்கள். நாட்டின் மொத்தச் சனத்தொகையில் இவர்களே பெரும்பான்மையோர் எனவே தொழிற்சாலைகள் இன்றி விவசாயக் கொள்கையின்மூலம் விவசாயிகளின் பெரும்பான்மையைப் பேணிக்கொள்ளவும், விவசாயிகளின் அமைச்சராக இருப்பதின்மூலம் அவர்களிற்கான தலைமையைத் தம்முடன் வைத்துக்கொண்டால் இடதுசாரிகளைப் பதவிக்கு வரவிடாது தடுக்கலாமென்ற அரசியல் உள்நோக்கத்துட

## இடதுசாரிகளைத் தோற்கடிப்பதற்காக கைத்தொழிலாதிக்கத்தை கைவிட்டமை

நாயக்க அரசாங்கம் எப்படி அச்சத்தில் இருந்துள்ளது என்பதும் ஆகும். இதற்குப் பின்னணியாக மேலும் சில விடயங்களை அவதானித்தல் நல்லது.

1947 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில ஐ. தே. க. அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றிருக்கவில்லை. இடதுசாரிகளும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் (இ.தொ.க.) சில சுயேட்சை உறுப்பினர்களும் இணைந்து இடதுசாரிகளை முக்கிய அங்கமாகக் கொண்ட ஓர் அரசாங்கத்தை அமைக்க வாய்ப்பிருந்தது. சுயேட்சை உறுப்பினராய் வெற்றிபெற்ற திரு. சிறிநிஸங்க தலைமையில் மேற்படி அரசாங்கத்தை அமைக்கும் முயற்சியாக சிறிநிஸங்கவின் 'ஜமுனு' இல்லத்தில் இடது வலுவுள்ள ஒரு சக்தியாக இடதுசாரிகள் காணப்பட்டமையால் இடதுசாரிகளை எதிர்கொள்வதும் தோற்கடிப்பதுமே சேனநாயக்காவின் பிரதான கொள்கையாக இருந்தமையால் அவர் அதற்கேற்ப உடனடியானதும், நீண்ட கால அடிப்படையானதுமான திட்டமிடலில் ஈடுபட்டார். அதிகாரத்தில் அமர்ந்துகொண்டதன் மூலம் தனது நலனுக்குகந்த வலதுசாரிச் சக்திகள் அனைத்தையும் பலப்படுத்தவும், இடதுசாரிகளைப் பலவீனப்படுத்தித் தோற்கடிக்கவும் ஏற்ற செயற்பாட்டில் சேனநாயக்கா மிகத் திறமையாக ஈடுபட்டார்.

இடதுசாரிகளே சேனநாயக்காவின் முக்கிய இலக்காகினர். இதனால் இடதுசாரிகளை வீழ்த்தக்கூடிய பொருதிய இடதுசாரிகளின் பலமானது டட்லி சேனநாயக்கா அரசாங்கத்தைக் கவிழ்த்தது என்பதைக்கொண்டு அக்காலத்தில் இடதுசாரிகளின் வல்லமை இதற்கு முன்னும் பின்னும் எப்படியிருந்தது என்பதை விளக்கலாம்.

**-மு. திருநாவுக்கரசு**

இத்தகைய இடதுசாரிகளிடமிருந்த தொழிற்சங்கப் பலத்தின் பின்னணியால்இலங்கையைக் கைத்தொழில் மயமாக்கத் திட்டமானது இடதுசாரிகளுக்கு ஒரு பெரும் தொழிலாளர் படையைத் திரட்டிக் கொடுப்பதாகவே முடியும் என்பதை சேனநாலும் சேனநாயக்கா விவசாயக் கொள்கைக்குப் பெரும் முன்னுரிமை கொடுத்து கைத்தொழில் மயமாக்கத்தை மிகக் குறைந்த பட்சமாக்கினர்.

அடுத்த வாரம் தொடர்வது "விவசாயக் குடியேற்றம்: ஒரு கல்லில் இரு மாங்காய்"

# வேம்பு

"மார்கோஸா" என தாவரவியல் பெயர் பெற்றிருக்கும் வேப்ப மரத்தின் ஏதேனும் ஒரு குணநலனையாவது அறியாதவர் எவரும் இருக்கமாட்டோம்.

தரிசு நிலத்திலும் நன்கு வளரக்கூடிய வேம்பின் இளந்தண்டே கிராமப்புற மக்களின் பல் துலக்கும் பிரஷ்ஷாக இன்று வரை பயன்பட்டு வருகிறது. தொடர்ந்து வேப்பந்தண்டில் பற்களை துலக்குதல் ஈறுகளில் படிந்து வளரும் நுண்கிருமிகளை அழித்து வாய்துர்நாற்றத்தை போக்குகிறது.

தினந்தோறும் காலை வெறும் வயிற்றில் ஐந்து இளம் வேப்பிலைகளைமென்று விழுங்குதல் வயிற்றில் பூச்சிகளின் வளர்ச்சியை தடுக்கிறது. தொண்டைப்புண், மஞ்சள் காமாலை, முகப்பரு ஆகியவை தோன்றுவண்ணம் காக்கிறது.

வேப்பிலையை அரைத்து களிம்பை பூசுதல் நாள்பட்ட ஒவ்வாமை [Allergy], தோல் அழற்சி, சிறு வெட்டுக்காயங்கள், புண்கள், தோல் அரிப்பு, தோல் வியாதிகளுக்கு மருந்தாகிறது.

அம்மை நோய் கண்டவர்களுக்கு வேப்பிலையுடன் மஞ்சள் சேர்த்து அரைத்துப் பூசுதல் தொப்புளம் வந்து உதிர்ந்ததால் தோலின் பாதுகாப்புப் போர்வையான இறந்த செல்கள், கெராட்டின் அடுக்கை இழந்திருக்கும் தோல் பகுதிகளில் நுண்கிருமிகளின் தொற்று ஏற்படாமல் காக்கிறது.

காய்ந்த வேப்பிலைச் சருகுகளை தானியக்குவியலோடு வைப்பது பூச்சிகளின் தாக்குதலை தடுக்கிறது.

வேப்பிலைகளை எரிப்பதால் உண்டாகும் புகை கொசுக்களை விரட்டுகிறது. வேம்புக்கு புற்று நோய் எதிர்ப்புச் சக்தி கூட இருக்கலாமோ என்று ஆராயப்பட்டு வருகிறது.

நவீன ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில் ஜப்பான், அமெரிக்கா பன்னாட்டுக் கம்பனிகள் வேம்பின் புற்றுநோய் எதிர்ப்புத்திறன், பூச்சிக் கொல்லித் திறன், பற்சிதைவு தடுப்புத் திறன், தோல் வியாதிகளை குணப்படுத்தும் தன்மை ஆகியவற்றின்மீது 'கண்டுபிடிப்பு உரிமம்' கொண்டாடி வருகிறார்கள், இப்போக்கு மூன்றும் உலகநாட்டு மக்களை சுரண்டலுக்கு இட்டுச் செல்லும்.

இந்தக் கண்டுபிடிப்பு உரிமைச்சட்டத்தால் எதிர்காலத்தில் வேப்பெண்ணெய், வேப்பஞ்சோப்பு போன்றவற்றின் விலை பன்மடங்கு உயரலாம். இதுமட்டுமன்றி கிராம மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் வேம்பை உபயோகிப்பது சட்டத்திற்கு புறம்பாகி அவர்களை சிக்கலில் மாட்டிவிடும் அபாயமும் உள்ளது.

நாட்டின் வரலாறு

# பிரான்ஸ்

எல்லை: தெற்கு ஸ்பெயின், கிழக்கு இத்தாலி, சுவிட்சலாந்து, ஜேர்மனி, வடக்கு லக்சம் போர்க், பெல்ஜியம்.

பரப்பு: 543, 965 சதுர கிலோ மீற்றராகும். தலைநகர்: பாரிஸ், தலைவர். ஜனாதிபதி உத்தியோகமொழி: பிரெஞ்சு 93.4% வீதமாகும். மக்கள்: ஜேர்மனியர் 2·7%, அல்ஜியர்: 1·7%, போர்த்துக்கீசர்: 1·4%, ஸ்பானியர், யூதர், இத்தாலியர்.

மதம்: ரோ. க. 80%, யூத மதம், முஸ்லிம் 3%.

நாணயம்: பிராங்

கல்வி: 98·8%

சனத்தொகை: 56,100,000 [1990ல்]

உற்பத்தி: இயந்திரம், மோட்டார் வள்ளம், புடவை, இரும்பு உருக்கு, இரசாயனப்பொருட்கள், ஐரோப்பாவில் கூடுதலான அளவு மீன் உற்பத்தி செய்யும் நாடு.

அமைப்பு: வடகிழக்குப் பகுதி காடுகள் சூழ்ந்த மரங்களைக் கொண்டுள்ளது. ஆறுகளும் உள்ளன.

வரலாறு: 1180 முதல் பிரான்சில் ஆங்கில ஆட்சி இடம்பெற்றது. 1338—1453 காலப்பகுதியில் இடம்பெற்ற யுத்தத்தையடுத்து ஆங்கில ஆட்சி முறியடிக்கப்பட்டது. 1789ல் பிரெஞ்சுப்புரட்சி நடந்தது. நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஐரோப்பாவைக் கட்டிழுெப்புமாறு வீயென்னு மகாசபை வேண்டுகோள் விடுத்த இங்கிலாந்து

(9ம் பக்கம் பார்க்க)

நல்லூர் கிளை நூலகம்.

சிறு கதை

# ஆத்மாவின் குரல்!

கே. ஆர். டேவிட்

''தம்பி... முதிரை மரம் பட்டு விறகாகி...எரிந்து சாம்பலாகும்வரை நிமிர்ந்து தான் நிற்கும் .. தமிழன் இவ்வளவுபெரிய இழப்புக்களைச் சந்திச்சும் இன்னும் முதிரை மரம் போலைதான் நிக்கிறு னெண்டால்..... காரணம் என்னெண்டு தெரியுமா...'' இப்படிக் கேட்ட ஜெயராமன் மகேசனைப் பார்க்கிறான்... அந்தப் பார்வையில் கண்ணுக்குள் முள்ளெடுக்கும் ஆயுதத்தின் கூர்மை!

'பிறேக்கை' இலேசாகப் பிடித்து, சைக்கிளை ஆமை வேகத்தில் உருளவிட்டு, ஹாண்டிலை நிதானமாய்ப் பிடித்து, கால்கள் இரண்டையும் நிலத்தில் பதித்து...கைகளிலும், கால்களிலும் நரம்புகள் புடைத்து......நடுங்க..... சில வினாடிகள் சீற்றிலிருந்து சைக்கிளைச் சமநிலைப்படுத்தி... சீற்றிலிருந்து இறங்குகிறான் ஜெயராமன்.

சைக்கிள் 'கரியலி'லுள்ள விறகு கட்டு ஜெயராமனின் தலைக்கு மேலால் உயர்ந்திருக்கின்றது.

சீற்றிலிருந்து இறங்கிய ஜெயராமன் இடது கையால் 'ஹாண்டி'லை நிதானமாகப் பிடித்து, வலது கையால் விறகுக் கட்டை அணைத்துப் பிடித்து, நெஞ்சோடு சரித்து, சைக்கிளை பெதுவாக நகர்த்தி மதிலோடு சரித்து நிற்பாட்டுகின்றான்.

வறுமையை எதிர்க்க அவன் மேற்கொண்ட தொழில் முயற்சியில் கடந்த இரண்டு வருடங்களாக கற்றுக கொண்ட அனுபவம்!

நாரியை வளைத்துக் குனிந்து சாறத்தின் கீழ்ப்பகுதியால் முகத்தைத் துடைத்த ஜெயராமன் தலையைத் திருப்பி நிமிர்ந்து நிற்கும் அந்தக் கட்டிடத்தைப் பார்க்கிறான். மேல்மாடிச் சுவரில் எழுதப் பட்டிருந்த பெயரை வாசிக்கிறான்.

'ரமணன் பதிப்பகம்'

இன்று அதிகாலை தொடக்கம் ஜெயராமன் மனப்பாடம் செய்துகொண்ட பெயர்.

இன்று அதிகாலை ஐந்து மணிக்கு ஜெயராமன் வீட்டிலிருந்து விறகு கட்ட புறப்பட்டபோது அவனது மூத்த மகன் 'அப்பா...கொப்பி வாங்கக் கன காசு வேணும்... காக்கிலோ கழிவு பேப்பராக வாங்கிக் கொண்டு வாருங்கோ..பிரதான வீதியிலை, தியேட்டருக்குப் பக்கத்திலை ரமணன் பதிப்பகத்திலை தான் வாங்கலாம்'' என்று மிகவும் வேதனையோடு கூறினான். ஒரு கிலோ கழிவு பேப்பரென்று அவன் கூறியிருப்பான். தகப்பனின் பல்லிமுட்டை வருமானத்தை அவன் உணர்ந்திருந்தான். அதனால்தான் காக்கிலோ கழிவு பேப்பரென்று அவன் கூறினான்.

ஜெயராமன்பெருமூச்சோடு சைக்கிளை உருட்டிக்கொண்டு வர, அவனுக்குப் பின்னால் வந்த அவனது மகள்...வீட்டுப் படலையடியில்...

''அப்பா.......காலமை பாணுக்கு மட்டும்தான் காசு கிடக்கு...குசுனியுக்கை உப்புக் கூட இல்லை...'' படலையைப் பிடித்தபடி அவள் கூறினாள்.

''ஒண்டுக்கும் யோசிக்காதை...நான் வேளைக்கு வந்திடுவேன்...'' ஜெயராமன் வழமைபோல் கூறிக்கொண்டான்.

வறுமையால் துரத்தப்பட்டு வறுமையின் எல்லையைத் தாண்டி ஓடி பல அனுபவங்களைக் கற்றுக் கொண்டவன் ஜெயராமன். எதையுமே இலகுவாக உள்வாங்கிக்கொள்ளும் பக்குவம் மிக்கவன்.

'ரமணன் பதிப்பக' வாசலில் அதன் பாதுகாப்பு உத்தியோகத்தரான மகேசன் நிற்கிறான். ஜெயராமன் ஒருமுறை மகேசனை ஏற இறங்கப் பார்க்கிறான்... ..

மெலிந்த உயர்ந்த தோற்றம், புனிதமான முகம்... மையுறிஞ்சிபோல் மகேசனின் குண இயல்பை மேலோட்டமாக ஜெயராமனின் பார்வைக் கோடு உறிஞ்சுகின்றது. மகேசனோடு கதைக்கலாமென்ற துணிவு ஜெயராமனுக்கு ஏற்பட மகேசனை நோக்கி வருகின்றான்.

''கழிவு பேப்பர் எடுக்கலாமா'' ஜெயராமன் மகேசனிடம் கேட்கிறான்.

''ஓம்...''

''ஒரு கிலோ என்ன விலை...''

''நாப்பது ரூபா...''

''அரைக்கிலோ தாறீங்களா...''

''கொஞ்சம் இருங்கோ... முதலாளி வெளியே போட்டார் வந்த உடனே எடுக்கலாம்'' ஜெயராமனின் கேள்விகளுக்குப் பதில் கூறிய படி ஜெயராமனை மிகவும் உன்னிப்பாக அவதானிக்கின்றான் மகேசன்.

மகேசனும் பஞ்சப்பட்டவன் பாம்பின் காலைப் பாம்பறியும் என்பார்களே...

அதுதானோ என்னவோ.. ஜெயராமனை மகேசன் இலகுவாக இனங்கண்டுகொள்கிறான். வறுமை வெக்கையில் வறுத்தெடுக்கப்பட்ட ஜெயராமனின் பஞ்சக்கோலம், மையொற்றிக் கடதாசியில் மை ஒற்றிக்கொள்வதுபோல் மகேசனின் இதயத்தில் ஒற்றிக்கொள்கிறது.

ஜெயராமன் திரும்பவும் சைக்கிளுக்கருகே வந்து நிற்கிறான்.

கொக்குவில் சந்தியிலுள்ள மரக்காலையில் விறகை விற்று அதன்பின்பு பிரதான வீதிக்கு வந்து கழிவு பேப்பரை வாங்கிக்கொண்டு வீட்டுக்குச் செல்வதிலுள்ள சிரமங்களைப் புரிந்துகொண்ட ஜெயராமன் தனது நண்பன் ஒருவனிட இருபத்தைந்து ரூபாவைக் கடனாக வாங்கிக்கொண்டு நேரடியாக இங்கு வந்துவிட்டான். கழிவு பேப்பரை வாங்கிக்கொண்டு கொக்குவில் சந்தியில் விறகை விற்று வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு குளப்பிட்டி வீதியால் வீட்டுக்குச் செல்வது என்பதுதான் அவனது திட்டம்.

''அப்பா.......குசுனியுக்கை உப்புக்கூட இல்லை'' காலையில் அவனது மகள் கூறிய வார்த்தைகள் வண்டாகி தென்னங்குருத்தை வண்டரிப்பதுபோல் அவனது உயிர்க் குருத்தை அரித்துக்கொண்டிருக்கின்றது.

ஜெயராமன் தலையை மேற்குப்பக்கம் திருப்பி சூரியனைப் பார்க்கின்றான்... மூண்டு மணிக்கு மேலைதான் இருக்கும் '' அவனது வாய் முணுமுணுக்கின்றது.

மகேசன் ஜெயராமனையே பார்க்கிறான்...

கட்டையான மெலிந்த உள்வளைந்த தோற்றம், குண்டு விழுந்து குருத்துச் சிதறிய தென்னை மரம்போல் வளர்ந்து சரிந்து காதுச் சோணைகளை மறைத்திருக்கும் தலைமயிர், காவிபிடித்த உதடுகள், ஒரு கோடன் சாறம், அழுக்குப் பிடித்த பெனியன்..


மகேசன் பெருமூச்சுவிட்டுக் கொள்கிறான்.

'ரமணன் பதிப்பகம்'

இப்பகுதியில் மிகப் பிரபல்யமானதொரு பதிப்பகம் இது. இங்கிருந்து வாராந்தப் பத்திரிகை ஒன்று வெளிவருகின்றது. இப்பத்திரிகையின் அளவைக் குறைப்பதற்காக வெட்டப்படும் பேப்பரை இவர்கள் விற்பனை செய்கிறார்கள். மூன்றரை அங்குல அகலமும், இரண்டடி நீளமும் கொண்ட கழிவு பேப்பர்.

பல தேவைகளுக்காக இந்தக் கழிவுப் பேப்பர் வாங்கப்

(8-ம் பக்கம் பார்க்க



மருத்துவம்

# பாம்புகள் எல்லாம் விஷமுடையவையே

# நான்கினால் மட்டுமே உயிர் ஆபத்து!

விஷவைத்திய நிபுணர்
க. சிற்றம்பலம்

எல்லாப் பாம்புகளும் விஷம் உடையன. ஆனால் இவற்றில் நாலு வகைப் பாம்புகளே மனிதனின் உயிரை உடனடியாகக் கொல்லக்கூடிய விஷ வீரியம் கொண்டவையாகும். நாக பாம்புகள். புடையன்கள், கண்ணாடி விரியன்கள், சுருட்டை விரியன் ஆகிய இந்த நாலுவகைப் பாம்புகளிலும் கூடிய விஷமுடையவை நாகங்களே. இவற்றின் விஷத்தின் வீரியமும் பாம்பின் வகைக்கேற்ப மாறுபாடு உடையனவாக இருப்பதை ஆராய்ச்சி மூலம் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்தவகைப் பாம்புகளுக்குத்தான் இரத்தத்திலுள்ள சீவவணுக்களை உடனடியாகக் கொல்லக் கூடிய வல்லமை உண்டு. உடலுறுப்புகளின் செயல்பாட்டில் மாறுபாடுகளும் வேறுபாடுகளும் ஏற்படச் செய்து உறுப்புக்களின் செயல்பாட்டினைச், செயல் இழக்கச் செய்து, உயிருக்கு ஆபத்தையும். அவஸ்தையையும் உண்டாக்கி உயிர் இழப்புகளுக்கு வகை செய்கின்றது.

இந்தவகைப் பாம்புகளால் தாக்கப்பட்டவர்கள் உடனடியாகச் சிகிச்சை பெற்றால் உயிர் ஆபத்திலிருந்து பாதுகாக்கப் படலாம். உயிர் ஆபத்தைக் கொடுக்கக்கூடிய பாம்பு தான் கடித்ததென்பதை எப்படி அனுமானிக்க முடியும்? அவற்றைப் பற்றிய விளக்கங்களையும், அவதானங்களையும் ஆராய்வது உபயோகமானதாகவும், முதலுதவி செய்யக் கூடியதாகவும் உடனடி சிகிச்சைக்கு விஷம் தீண்டப்பட்டவரைச் சேர்க்கக்கூடிய வழிகளுக்கு உதவியாகவும், உபயோகமாகவும் உயிர் ஆபத்தைத் தந்துதவக்கூடியதாகவும் இருக்கும்.

ஆகவே ஒருவருக்கு விஷம் தீண்டிவிட்டால் தீண்டியது பாம்பு தானா என்பதை முதலில் அறியவேண்டியது அவசியமாகும்.

அதை எப்படி அறியலாம் எனில் தாக்கப்பட்டவரின் வார்த்தைகளாலும், தாக்கப்பட்ட(கடிக்கப்பட்ட) இடத்தில் ஏற்பட்ட காயத்தின் தோற்றம், துளையுள்ளதாகவும், காயத்தின் எண்ணிக்கையின் (பலபதிவுகளின்) அளவுகளை கொண்டும், தாக்கப்பட்ட காலத்தில் ஏற்படும் மாறுபாடுகளை கண்டுகொள்ளலாம். நிறம் நீலம் கலந்தது போல் இருக்கும். கடியுண்ட காலத்தில், தொடர்ந்து இரத்தக் கசிவு ஏற்படும். கடிக்கப்பட்ட இடத்தில் வீக்கம் காணப்படும். தாக்கப்பட்டவர் படும் அவஸ்தையில் வாந்தியுடன் கண் முழிக்கமுடியாத நிலையில் இருப்பார். வார்த்தைகள் கொன்னிப் பேசுவதாலும், வியர்வை உடலில் சில மாறுபாடுகளை அவதானிப்பதாலும் உயிராபத்தை உடனடியாகக் கொடுக்கக்கூடிய பாம்புதானா என அனுமானித்து உடனடியான சிகிச்சைக்கு விஷம் தீண்டப்பட்டவரை உட்படுத்தவேண்டியது அவசியமும், அவசரமுமாகும்.

விஷம் தீண்டப்பட்டவரின் இரத்த பரிசோதனை மூலம் இரத்த உறைவின் நேர அளவும், சீவ அணுக்களின் தாக்கங்களையும் கண்டு அதன் மூலம் பாம்பின் விஷத்தின் வீரியத்தை அறிதலும், அதற்கேற்ப சிகிச்சை முறைக்கு செயல்படுத்துவதும் உதவியாக அமைகின்றது. இப்படிச் செய்வதால் கொடிய விஷமுடையதென ஆராயப்பட்ட பாம்புக்கடிக்குரிய விஷ சிகிச்சைகளை உடனடியாகச் செய்தும், விஷ தாக்கத்தால் ஏற்பட்ட இரத்த அசுத்தத்தை நீக்கப் புதிய இரத்தத்தை உடலில் ஏற்றி இரத்த சோகையை சீர்படுத்தியும், சுவாச உறுப்புக்களின் செயல்பாட்டின் தடைகளை செயற்கை முறையில் செயல்பட உதவுவதாலும், உடலுறுப்புக்களின் உடனடியாக விஷ ஆபத்தைநீக்கி மனிதனை வாழவைக்கும் வழிவை ஏற்படுத்தலாம்.

மேலே சொல்லப்பட்ட நாலுவகைப் பாம்புகளை விட வேறு பலவகைப் பாம்புகள் விஷமுடையனவாக இருந்தாலும் உடனடியாக உயிர் ஆபத்தைக் கொடுக்காமல் மெல்ல மெல்ல உடலில் பல மாறுதல்களையும், உடல் உறுப்புக்களில் தாக்கத்தையும் கொடுத்து மனிதனை மாழவைக்கின்றன.

பாம்புகளின் பொதுவான பாகுபாடுகளை ஆராய்ந்தால், உலகிலுள்ள பாம்புகளில் இருபது (20%) வீதமானவை உடனடியாக தன் நஞ்சின் வீரியத்தால் உயிர் ஆபத்தைக் கொடுப்பனவாகவும் 80% (எண்பது வீத)மான பாம்புகள் உடனடியாக உயிர் ஆபத்தைக் கொடுக்காவிட்டாலும், நாட்கள் செல்லச் செல்ல உடலிலுள்ள உறுப்புக்களில் மாறுபாடுகளையும், வேறுபாடுகளையும் கொடுத்து வேறு பல நோய்களுக்கு காரணகர்த்தாவாகின்றன. தாக்கப்பட்டவர்கள்பலகாலங்கள் நோயாளியாக இருந்து துன்பப்படுவதை காணலாம்.

ஆகவே எல்லாவகைப்பாம்புகளும் விஷமுடையனவே. ஆனால் விஷ அளவில் 20%ப் பாம்புகள் கொடிய விஷமுடையனவாக காணப்படுகின்றன எனலாம்.

ஆகவே பாம்புக் கடியை அலட்சியம் செய்யாது உடனடியாக நோயாளியை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வது அவசியமாகும். விஷ நோயாளியின் விஷத்தின் அளவையும், அதனால் ஏற்படும் விளைவையும், பல பரிசோதனைகள் மூலம், தீர்மானித்து தக்க சிகிச்சையளிப்பதுவைத்தியர்களின் கடமையாகும்.

# புறநானூறு காட்டும் தமிழர் சால்பு

## ஒரு மீள்பார்வை

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
[தலைவர், தமிழ்துறை, யாழ். பல்கலைக்கழகம்]

'பண்பாடு' என்ற சொல்லுக்கு இப்பொழுது வயது அறுபது ஆகின்றது. டி. கே. சிதம்பரநாதமுதலியார் இச்சொல்லை ஆக்கி எமக்கு வழங்கினர். ஆனல் 'பண்பாடு' எனற சொல்லுக்கு நிகரான 'சால்பு' என்னுஞ் சொல் பண்டைய தமிழ் இலக்கியங்களிலே பயின்று வந்துள்ளது. இச்சொல்லை இனங்கண்டு, 'தமிழர்' என்ற சொல்லுடன் சேர்த்து. பண்டைத் தமிழருடைய பண்பாட்டுகோலங்களையெல்லாம் விளக்கிக் கூறும் தன்னுடைய நூலின் பெயராக அமைத்துக்கொண்டார் பேராசிரியர் சு. வித்தியானந்தன், அவருடைய தமிழர் சால்பு என்னும் நூல் 1954-ஆம் ஆண்டு வெளிவந்தது.

இன்று நாம் புறநானூறு என்னும் இலக்கியத்தைப் புதிய நோக்கிலே மீளப் பார்க்க வேண்டியுள்ளது. புறநானூற்றுச் செய்யுட்களிலே பதிவுசெய்யப்பட்டுள்ள தமிழர் சால்பினை இன்றைய பல் வகைப்பட்ட நிலைமைகளின் பின்புலத்திலே மீளப்பார்ப்பது பொருத்தமாயிருக்கும். புறநானூற்றுப் பாடல்களைத் தொகுத்தவர்கள் அது புலப் படுத்தும் தமிழர் சால்பினை மனங்கொண்டு தொகுக்கவில்லை என்பதைக் காண்கிறோம், அப்பாடல்களை மானிடவியல், அகழ்வாராய்ச்சியில் மொழியியல் சான்றுகளைக் கொண்டு கால வரன்முறைப்படி வரிசைப்படுத்துவோமாயின், எம்முடைய இலக்கியப் பாரம்பரியம் நாம் இதுவரை காலமும் கூறிவந்த இரண்டாயிரம் ஆண்டுகளல்ல, அவற்றுக்கு முற்பட்ட காலத் தொடக்கத்தினையுடையது என்பதனை அறிய முடியும்.

புறநானூற்றுப் பாடல்கள் ஒரு வீரவூழிக் கால வாழ்வியலைப் புலப்படுத்துவனவாக அமைகின்றன. வீரவூழிக்கால வாழ்வியலுக்கு அடிப்படையாகஅமைந்ததுவீரமேயாகும் இவ்வீரத்தின் விளைநிலமாக அமைந்தது போர், இதன டிப்படையிலேயே அன்றைய வாழ்வின் ஒட்டம் அமைந்தது. இன்று எமக்கு அதனை மீள நோக்குவது எளிதாயிருக்கும், வீரமும் போரும் வாழ்வியலின் அடிப்படைகளாக அமையும்போது, பெற்றோர், குடும்பம், நாடு, வீரன் என்ற அடிப்படையிலே பண்டைத்தமிழர் கடமைகளை இனங்கண்டனர். அந்தக் கடமைப்பட்டியலைக் கூட ஒரு தாய்தான் முன்வைக்கிருள் புறநானூற்றிலே 312 ஆம் பாடல் இச்செய்தியைப் பின் வருமாறு பதிவு செய்கிறது.

''ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள அருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே''.

பொன்முடியார் என்னும் புலவர் பாடிய இப்பாடலிலே, வீரர் தோன்றத் தலையாய கடனை ஏற்ற தாய் கடமைகளை நிரைப்படுத்துகிருள். வெறுமனே குழந்தையைப் பெற்று விடுவதுதான் தாயினுடைய கடமையல்ல. அப்பிள்ளையினுடைய தொடக்கக் கல்விப்பயிற்சி அவளாலேயே அளிக்கப்படுகிறது. தந்தை அப்பிள்ளைக்குப் போர்க்கருவிப் பயிற்சியளித்து வீரனக ஆக்குகிருன். கொல்லன் வேல் செய்து கொடுக்கிருன். நாட்டுக்குத் தலைவர் எல்லாவகையான ஒழுக்கங்களுக்கும் வழி காட்டுகிருர். வீரன் போர்க்களத்திலே யானையை வீழ்த்தி வருகிருன். நாடு காவல் பணிக்கு நாமென்ன செய்யலாம் என்ற நாட்டு மக்கள் கேள்விக்கு இப்பாடலூடாக விடையும் விளக்கமும் தருகிருர் பொன்முடியார். இவ்வாறு வீரவூழிக்காலத் தமிழர் சால்புக் கூறுகளைப் பல புறநானூற்றுப் பாடல்கள் பதிவுசெய்துள்ளன. அவை இன்றும் பொருத்தமுடையன வாயமைகின்றன.

தமிழருடைய விருந்தோம்பும் பண்பு தனித்துவமானது. எந்த நேரமாவது எங்கள் உறவினர் வீட்டையோ நண்பர் வீட்டையோ தட்டி, அழைப்பு இல்லாதபோதிலும், எதிர்பார்ப்பு இல்லாத போதிலும், உள்ளே சென்று ஏதோ வகைவிருந்து பெறும் பண்பை ஒரு தடவை எண்ணிப் பாருங்கள். வீட்டுக்கு யாராவது விருந்தினர் வரக் கூடும் என்று எண்ணிச் சோறு ஆக்குகையில் இன்னெருவருக்களவான மேலதிக அரிசியினை எங்கள் அன்னைமார் அல்லது துணைவியர் அல்லது பிள்ளைகள் இடுகின்ற வழக்கத்தினை நாம் அறிவோம். வாய்ப்பு இல்லாத வீட்டிற்கூட ஒரு சிறுகை [சிறங்கை] அரிசி கூடப் போடும் மனநிலையை எண்ணிப்பாருங்கள். இதைத்தான் 'விருந்தோம்பல்' என்ற இயலினலே வள்ளுவனும் விளக்கினன். தமிழருடைய இந்தச் சால்புக்கூறுக்கு ஊற்றுப்புறநானூற்றுப் பாடல்கள் பலவற்றிலே காணக்கூடியதாயுள்ளது.

பண்டைக்காலத்தில் தமிழரின் கல்வி, புலவர்களின் சார்பு, ஆண்-பெண் நிலைப்பாடு, பொருளாமிய நிலை, அரசு வளர்ச்சி அதன் பரப்பு, உலகு பற்றிய நோக்கு என்பன புறநானூற்றுக் காலத்திலே எப்படி இருந்தனவென்பதை அந்நூற்பாக்களாலே அறிகிறோம். அவை மீள நோக்கப் படவேண்டும்,

[பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுப் பேருரையிலிருந்துதொகுப்பு: எஸ். எஸ். கதிரமலை]

## சத்துள்ள பழங்கள்

★ **தோடம்பழம்:**
விட்டமின் ''ஏ'', 'பி' உடன் அதிகளவான விட்டமின் ''சி''ஐயும் கொண்டுள்டுள்ளது. ஆயுர்வேத வைத்தியத்தில் இப்பழத்திற்கு சளி அகற்றும் தன்மை உண்டு.

★ **மாதுளம்பழம்:**
மற்றைய பழங்களை விட சுவையானதோடு காபோவைதரேற்று விட்டமின் ''சி'' என்பனவற்றை கொண்டுள்ளது.

★ **எலுமிச்சம்பழம்**
இதில் விட்டமின் ''ஏ'', ''பி'', ''பி 2'', ''சி'' என்பன உள்ளது. சிறுவர்களின் வளர்ச்சிக்கு தேவையான விட்டமின் ''ஏ'', ''பி'' கொண்டுள்ளதோடு சிறுவர்களுக்கு ஏற்படும் மந்த குணத்யையும் போகக்கூடியதாகும்.

பா. நந்தகுமார்.

# கவிமலர்

## தெய்வக் குஞ்சு

ஈவிரக்கம் இல்லாத கொடுமைப் பித்தர்
''இளந்தமிழர்'' என்றெல்லாம்
இகழ்ந்தாளாமே!

கூவி வந்த குண்டுருட்டிப்
பீப்பா கொட்டிக்
கும்மாளம் நாள்தோறும் போட்ட வேளை
சீவியத்தை துண்டாடி
தலை தறித்து
சிதறு சன்னம் பறக்க விட்டு,
மார் கிழித்து
தூவிய தார் கொடுமைகளை—இந்தமண்ணில்?
துரைகளது திருவருளை
அறியார் யாரே!

''சள சளத்த'' கதை பறந்து
மெழுகிப் பூசி
சாந்தி என்ற மந்திரத்தை
உரப்பாய் ஓதி
களவு வைத்தே—அடி நாக்கில்
நுனி நாக்காலே
கருணுவை மந்திரியைப் பசப்பிக்கொண்டால்
இழுவலுக்கும் நழுவலுக்கும் இடமிருக்கும்
இழுத்தடிப்புக் கொளுவலுக்கும்
பயன் கிடைக்கும் என்று

பார்த்திருந்த
பாசாங்கு வெற்றி பெற
விடுவார் யாரே?
முந்த நாள் ......
பெரும் பறவை இரண்டைச் சுட்டு
முடித்துவிட்டார் இளந்தமிழர்
என்பதற்காய்
அந்தகோ,
அனே,
அம்மே,

தாத்தே! என்றே
அலறுகிருள் அவள் பிள்ளை
சுற்றம் காக்க
இந்த வாறே எதிர்ப்புத் திறனைக் காட்டி
யாழ்ப்பாணம் அண்ணுந்து பார்த்த தென்றல்
நொந்து போய்த்
தள தளத்துப்
பர பரத்து
நொட்டை சொல்லத் தொடங்கி விட்டாள்
தெய்வக் குஞ்சு!

— முருகையன்

நன்றி 'வானம் எம் வசம்'

# விலங்குகள் கற்றுத்தரும் மூலிகைச் சிகிச்சைகள்

மருத்துவம் - மனித குலம் தழைக்கத் தோன்றிய மகத்தான தத்துவம். மருந்து மந்திரம்போல அற்புதங்கள் புரியும் இரு மருந்துகளின் பெயரைக்கூட வெளியே உச்சரிக்காமல் மிகவும் ரகசியமாக காத்து வந்தனர் வைத்தியக் கலையில் வையம் போற்றும் சாதனை படைத்த நம்முன்னேர்கள்.

இவர்கள் மனிதனுக்கு உண்டாகும் நோய்களின் எண்ணிக்கை 4448 எனக் கண்டு இந்த நோய்களை போக்கும் மூலிகைகளையும் ஆராய்ந்து ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்தார்கள். காலப்போக்கில் சுவடிகள் அழிந்துவிட்டன. இது மனித இனத்துக்கே பெரும் இழப்பாகும். இதை ஈடுசெய்ய காட்டு மிருகங்கள் பெருமளவில் உதவுகின்றன என்ருல் நம்பமுடிகிறதா?

காட்டு மிருகங்கள் பலவிதமான அரிய மூலிகையின் மகத்துவத்தை இயற்கையிலேயே அறிந்து வைத்திருக்கின்றன. இவைகளுக்கு வந்திருக்கின்ற அல்லது வரப்போகின்ற குறிப்பிட்ட நோய்களுக்கேற்ப மூலிகைகளைத் தின்று நோய்களை விரட்டி அடிக்கின்றன. இந்தவகை மூலிகையை மனிதன் பயன்படுத்தும்போது சிறந்த பலன் கிடைக்கிறது என விஞ்ஞானிகளும், டாக்டர்களும் கண்டு பிடித்துள்ளனர். இப்படி மிருகங்களிடமிருந்து மனிதன் கற்றுக்கொள்ளும் மருத்துவ முறைக்கு ''Zoo pharma Cognosy'' எனப்படும்.

உதாரணத்திற்கு டான்சானியா காட்டிலுள்ள சிம்பன்சி குரங்குகள் தங்களுடையகாலை உணவிற்கு அருகிலுள்ள பழமரங்களைநாடுவதில்லை. மாருக சில மைல் தூரம்வரை நடந்து சென்று ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைகிறது. இங்கு Aspillia [நம் ஊர் சூரிய காந்திவகை] என்ற செடியின் இலையைப் பறித்து விழுங்குகின்றன.

இந்த இலையை விஞ்ஞானிகள் பரிசோதித்தபோது இதிலிருந்து சிவப்பு நிறத்தில் எண்ணெய் போன்ற திரவம் வெளிப்பட்டது. இந்த எண்ணெயின் ''Thiarubrin 43'' என்ற ரசாயனப் பொருள் இருப்பதாகக் கண்டுபிடித்தார்கள். இது ஒட்டுண்ணிகள், காளான்கள் மற்றும் வைரஸ் போன்ற கிருமிகளை அழிப்பதோடல்லாமல் நுரையீரல் மற்றும் மார்பகத்தில் தோன்றக்கூடிய புற்றுநோய் கட்டிகளின்செல்களை அழிக்க வல்லது என தெரிவித்துள்ளார்கள்.

★ கண்ணைக் கவரும் வர்ண சாறிகளுக்கும்
பிடவைத் தினுசுகளுக்கும் ஐவுளிக்கடல்
★ திருமண பட்டுப் பிடவைகளுக்கு
பெயர் பெற்றவர்கள்.

**திருமாட்டி பிடவைக் கடல்**
**122, மின்சார நிலைய விதி (மேல்மாடி)**
**யாழ்ப்பாணம்**

வெளிவந்துவிட்டது

க. பொ. த. (சாதாரண) வகுப்புக்குரியது
ஆண்டு 10 பாடதிட்டத்தை உள்ளடக்கியது
''விவசாய விஞ்ஞானம்'' பகுதி 1
ஆக்கம்: திரு. கு. சதாசிவமூர்த்தி

**புதிர் விவசாய விஞ்ஞான வினவிடை 2000**
ஆக்கம்; திருச்சி நவரத்தினம்

**ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை**
235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

# புதிய பாதையில் நகரும் உலக நீதி முறைகள்

[சமீபத்தில் தமிழீழ நீதி நிர்வாகத் துறையினரால் வெளியிடப்பட்ட ''சட்டத்தின் திறவுகோல்'' தேசியத் தலைவர் வே. பிரபாகரனிடம் சஞ்சிகையின் முதலாவது பிரதி நீதிநிர்வாகத்துறைப் பொறுப்பாளர் திரு. பராவினுல் வழங்கப்பட்டு வெளியிடப்பட்டது. நீதி பற்றிய சமகால எதிர்கால வளர்ச்சிப் பரிமாணங்களை இக்கட்டுரை ஆராய்கிறது.]

இன்றைய உலக ஒழுங்கு பல்துறை சார்ந்த பல மாற்றங்களுடன் முன்னேறிச் செல்கின்றது. எனினும் குறிப்பாக அது பொருளாதாரப் போட்டி அதிலும் இலத்திரனியல் போட்டி எனும் ரீதியில் இன்றைய உலக நகர்வியக்கம் அமைந்துள்ளது. இதுவேறுபட்ட பல அரசியல், சமூக இராணுவ முறுகல் நிலைகளை அடுத்த உலகம் சந்திக்கும் பொருளாதார முறுகல் நிலையை எய்தியுள்ளது. இது பொருளாதாரப் போர் என அழைக்கப்படுகிறது.

இப்போதைய உலக இயக்கம் இவ்வாறு பொருளாதார ரீதியில் அமைந்திருக்கையில், சட்டரீதியாக அல்லது நீதி பரிபாலன ரீதியாக எதனை உலகம் நாடுகின்றது? இது தொடர்பான உலக இயக்கம் எப்படி உளது அல்லது இதுபற்றிய உலக யதார்த்த நிலை என்ன என்பது பற்றி நோக்கும்போது அது விசித்திரமான ஒரு பாதையில் செல்வதை உற்றுப் பார்க்கும் எவராலும் அவதானிக்க முடியும்.

அதாவது படிமுறை வளர்ச்சியினூடாக வந்துகொண்டிருந்த ஒவ்வொரு நாடுகளினதும் நீதிசெலுத்துகை முறைகள் சட்ட ஆக்கங்கள் ஊடாக அல்லது வரையறுக்கப்பட்ட சட்டங்களின் ஊடாக வரையறை செய்யப்பட்டன. இத்தகைய வரையறுப்பானது, பரவலாக வலுவானதாயும் நீதிபரிபாலனத்தைஅடைத்து வைத்தாற்போன்றும் அமைந்திருக்கின்றது. இந்தமுறைமை இடைக்காலமான கடந்த பத்தாம் நூற்றுண்டு அளவில் ஆரம்பமாகி இன்றுவரை தொடர்கின்றது. ஆனுல்ஆதிச் சமுதாய ஒழுங்கில் வரையப்பட்ட சட்டஅமைப்புக்கள்அல்லது கட்டுப்படுத்தும் பரப்புக்கள்எதுவும்பெரிதாய்ப்பேணப் படவில்லை. இது ஒரு திறந்த நீதியை சமூகங்கட்கு ஏற்ற வகையில் செயற்படுத்த வழி வகுத்தது. ஆனுல் அங்கே பல பிற்போக்கான நடைமுறைகள் பல பின்பற்றப்பட்டமையும் நிதர்சனமான ஒரு விடயமாகும். அதனுடன் முற்காலத்தில் பல விசித்திரமான நீதி பரிபாலன முறைகளும் நடைமுறையில் இருந்தன.

ஆனுல் இன்று நவீனமயமாகும் நீதி பரிபாலனமுறைகள் பண்டைய சமுதாய நீதி செலுத்துகைக்கு ஒப்பான முறையில் ஆனுல் முன்னேறிச் செல்வதனை அவதானிக்கலாம். இந்த இன்றைய நீதிபரிபாலனமுறையில் மாற்றங்களைக்கொண்டுவரும்வேறுபட்ட பல நடவடிக்கைகளை ஐரோப்பிய நாடுகளும் வடஅமெரிக்க நாடுகளுமே பெரிதும் கடைப்பிடிக்கின்றன. இவ்வாருன நடைமுறைகள் உலகின்ஏனைய நாடுகளது சட்ட அறிஞர்களைத் திரும்பிப் பார்க்கவைக்கின்றது என்பதில் ஐயமில்லை.

இந்த நாடுகள் தமக்கென வரையறை செய்து அமைக்கப்பட்ட சட்ட ஒழுங்குகளை உடையனவாகவே காணப்பட்டாலும் அவைகளைப் புறத்தொதுக்கி தமது சட்ட அலுவல்களை மேற்கொள்கின்றன. இவ்வாருக இடம்பெறும் இச் செயல்முறை வளர்ச்சியானது சட்ட உலகில் செய்யப்படுகின்ற ஒரு பெரும் விந்தையான மாற்றம் என்று அதனை அவதானிக்கும் சட்ட அறிஞர்களால் வர்ணிக்கப்படுகின்றது.



இந்தப் புதிய பாதையில் நகரும் நாடுகளில் இடம்பெற்ற பலஉண்மைச் சம்பவங்கள் இந்தச் சட்ட உலகின் விசித்திர நகர்வைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளன. பல பரிமாணங்களில் உலகம் நடைபோடும்போது இத்தகைய நிகழ்வுகள் சட்ட உலகம் என்ற ஒரு பரிமாணத்திலும் உலகம் நடைபோடுவதனைக் காட்டுகின்றது என்பதில் ஐயமில்லை.

இப்புதிய நகர்வில் சிக்கல்களை நீதிபதிகள் அணுகுவதனையும் அவற்றிற்கு முடிவுகள் வழங்குவதையும் நோக்கும்போது ஒரு படியை அறியலாம். அதாவது முற்றகவையர் மட்டுமே சட்டச் செயற்பாடுகளுக்குச் சட்ட அங்கீகாரம் உடையோர் எனும்கோட்பாடு பொதுவாக இருந்தது. ஆனுல் சிற்றகவையினரும் தமக்குச்சட்டம்அனுமதியளிக்காத விடயங்களில்தகுதியுடைய முற்றகவையர் போற் செயற்படலாம் என இங்கிலாந்திலும் ஐக்கிய அமெரிக்காவிலும் கொடுபட்ட இரண்டு வேறுபட்ட தீர்ப்புகள் முடிவு கூறின. அதேபோல் ஒருவர் இறக்கும் முன்பு செய்த ஒரு குற்றத்திற்கான குற்றப்பொறுப்பை அவரது இறப்பின் பின்பு சட்டப்படி எண்பிக்கப்பட்டபொழுது அவரது இறந்த உடலைப் புதைகுழியால் வெளியே எடுத்து அதற்குத் தண்டனை வழங்கியுள்ளனர். மேலும் இரண்டு பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர்க்கு இருபது வருடச் சிறையை இங்கிலாந்தின் ஒரு நீதிமன்றம் அவர்களது ஒரு கொலைக் குற்றச்செயலுக்காக விதித்தது. இவ்வகையாகத் தீர்ப்புக்கள் வழங்கும் நீதியினைப் புதிய பாதையில் நகரும் நீதி என்றும் இது சட்ட வரம்புகட்கு அப்பாற்பட்டது என்றும் சட்டவல்லுநர்கள் எண்ணுகின்றனர். அதனுடன் இந்தியாவின் நீதி விசாரிப்பு முறையில் நீதிபதிகளின் தற்துணிவு தற்பொழுது பெருமளவில் வளர்ச்சிபெற்றுவருதனையும் இதனுல் விசித்திரமான நீதி செலுத்துகை முறைகள் வளரலாம் எனவும் ஆருடம் கூறலாம்.

அதேபோலவே சட்ட ஆக்கங்களும் பல மௌனங்களைச் சந்திப்பதனுலும் விசித்திரமான பல விடயங்களை ஏற்பதாலும் சட்ட உலகின் புதிரான நகர்வில் பிரதான பங்கு வகிக்கின்றது. அண்மையில் இத்தாலி ஒரு புதிய சட்ட ஒழுங்கைப்பற்றிச் சிந்தித்து அதற்கு வடிவம் கொடுத்து வருகின்றது. அதாவது புதிய வகையில் இலகுபடுத்தப்பட்டு எளிமையாக்கப்பட்ட ஒரு நீதி பரிபாலன முறை மிகவும்சிறப்பானதும் அனைவருக்கும் நீதி கிடைக்கும்வகையில் அமையுமென்பதுமே அதுவாகும். இந்த முறைமை ஏனைய ஐரோப்பிய நாடுகளும் தமது நாடுகளுள் பரப்பலாமா என்பதைப்பற்றிக் கடுமையாகச் சிந்திக்கும் அளவிற்கு அமைந்துள்ளது.

அதுமட்டுமல்லாமல் திறந்த முறை நீதிமன்றங்களின் அமைப்பு மாற்றப்பட்டு அடைபட்ட நான்கு சுவர்களுள் இன்றைய நீதி செலுத்தப்படும் முறை நடைபோட ஆரம்பித்துள்ளது. இது பலரது காலவிரயத்தைகுறைத்து இலகுவில் மக்கள் தொடர்பு கொள்ள வாய்ப்புஏற்படுத்தி நீதிசெலுத்தப்படுகிறது. இதனுல் அந்த நாடுகளில் மக்கள் நிறைவடைகிருர்கள். அத்துடன் நீதி இலகுவானதாயும் விரைவானதாயும் செலுத்தப்படவும்கூடியதாயும் அமையவும் செய்கின்றது.

இவ்வாருன ஒரு விசித்திர பாதையில் நகரும் நீதி பரிபாலனத்தினை ஊக்குவிக்கப் பல வழிவகைகளும் ஊக்குவிப்பு நடவடிக்கைளும் வளர்ந்த நாடுகளால் மேற்கொள்ளப்படுகிறது. அவை பெரும்பாலும் நகரும் நீதிமன்றுகள், அதிகவான சட்ட அறிஞர்கள், பெருந்தொகை நீதிபதிகள், நெருக்கமான நீதிமன்ற அமைப்பு முறைகள் மூலம் நகர்த்திச் செல்லப்படுகின்றன.

இவ்வாருன பலவிடயங்களை ஆராய்ந்துபார்த்தால் இன்றைய உலகநீதி அல்லது சட்ட உலகம் ஒரு புதிய பாதையில் நடைபோடுவதை அவதானிக்க முடியும். ஆனுல் இன்னும் பழமைகளையே கடைப்பிடித்துவரும் ஒரு நீதி அமைப்பைக்கொண்ட அல்லது பிற்போக்கான வரையறுக்கப்பட்ட நீதி அமைப்பு முறைகளைப் பின்பற்றும் பல நாடுகளும் உள்ளனவென்பதும் வெளிப்படையான ஓர் உண்மையே.

அனேகமாக இத்தகைய சட்ட உலகின் நீதி செலுத்துகை முறைகளில் உள்ள போற்றத்தக்க விடயங்கள் பிற்போக்குத் தன்மையுடைய ஒரு நாட்டில் உதயம்பெற வேண்டுமானுல் அங்கே ஒரு சமூகப் புரட்சி அல்லது கலாச்சாரப்புரட்சிதேவையான ஒன்ருகவே உள்ளது. அவ்வாறு புரட்சி இடம்பெருவிடின் பழமைவாதக் கருத்துக்களை அச்சமூக அமைப்புக்களில் இருந்து களைவது என்பது குதிரைக் கொம்பு போன்றதொரு சங்கடமான விடயம் என்பதில் ஐயமில்லை. பழமைக் கருத்துக்கள் களையப்படும்போது தான் இவ்வாருன ஒரு நீதி வகையை அந்தச் சமூகம் ஜீரணித்துக்கொள்ளும் வாய்ப்புஏற்படும்.

—பிரம்மபுத்திரன்

நன்றி
சட்டத்தின் திறவுகோல்

# 'ராடர்'

'ராடர்' என்பது மிக நுட்பமான கருவி வானத்தில் பறக்கும் விமானத்தை பற்றியும், அது செல்லும் திசை முதலியன பற்றியும் கண்டறிந்து காட்டும் கருவி. இரவில் திருட்டுத்தனமாக நுழையும் விமானங்களை பற்றி அறிவிககும் ஆற்றல்மிக்க கருவி.

இந்த அற்புதக் கருவியை ஏமாற்றிவிடககூடிய விமானங்கள் தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்த விமானங்கள் வானில் சென்ருல் ராடர்களினுல்கண்டறிய முடியாது.

அமெரிககாவின் U2 விமானங்கள் ரஷ்யாவின் மேல் பறந்து உளவுகளில் ஈடுபட்டதுடன், புகைப்படங்களும் எடுத்துவந்திருக்கின்றன.

இந்த விமானங்கள் பிளாஸ்டிக், பிளைவூட் மரம் ஆகியவற்றைகொண்டு தயாரிகப்படுகின்றன. இதில் சிறிதளவு உலோகம் இடம்பெற்றுள்ளது.

# நாட்டுப்பற்று வளர்த்த பாரதியார்

''உனக்கு அறிவில்லையா? உனக்கு காது கேட்காதா? நாள்தோறும் உன்மீது பாட்டுப்பாடுகிறேன். நான் கேட்கும் வரங்களையெல்லாம் கொடுத்து விடக்கூடாதா?'' என்று அன்னை பராசக்தியையே கோபக்கனல் தெறிக்கக் கேட்டவர் வேறு யாருமல்ல எம் மகாகவி பாரதிதான். இன்று எமக்கெல்லாம் நண்பனுகிவிட்ட பாரதி அன்று தனக்கு நண்பர் இல்லையே என்று அடிக்கடி கவலைப்படுவாராம்.

பாரதி தன்வாழ்நாளில் கொடிய வறுமையில் வாடியவர். ஆனுல் அவரிடமிருந்துதான் வற்ருத செல்வமாக கவிதை ஊற்றெடுத்தது. அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் சாதாரண நடையில் ஆனுல் யாப்புக்கிணங்க சமூகத்தின் மூலை முடுக்கிலுள்ள அத்தனை பிரச்சனைகளையும் மிகத் துணிச்சலாகத் தன் கவிதையில் தரிசிக்கவைத்தார்.

நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், இனப்பற்றும் கொண்ட பாரதி பேசாத விடயமே இல்லை எனலாம்.

''செந்தமிழ் நாடெனும்
போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதி
னிலே''

என்று பாடும் பாரதி அந்த நாட்டில் நாம் சுதந்திரமாக வாழவேண்டும் என்று விரும்புகின்ருர். அடிமையாக வாழும் பண்பை எதிர்க்கின்ருர்.

''கண்ணினும் இனிய சுதந்
திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ''

என்ருர்.

பாரதியின் காலகட்டத்தில் பெண்ணடிமைத்தனம் மேலோங்கி நின்றது, கல்வித் தடை, கட்டாய திருமணம், பாலியல் விவாகம் போன்ற பல அடக்குமுறைகள் மேலோங்கி நின்றன. அந்த நேரத்தில் ''ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ் வையகம் தழைக்கும்'' என்ருர்.

காலாகாலமாக பண்பாடு என்ற போர்வையில் பெண்களுக்கு நாற்குணம் வேண்டும் என்ற கருத்தை ஒரு நொடியில் உடைத்து-

''நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்'' என்று கூறியதோடு நிற்காமல்

''நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும்'' வேண்டுமென்ருர்.

பெண்களுக்கு கல்வி வேண்டும் என்று குரல் கொடுத்த பாரதி.

''பெண்களறிவை வளர்த்தால் வையம் பேதமையற்றிடுங் கண்டீர்''

''கற்பு நெறியென்று சொல்லவந்தார் இரு கட்சிக்கும் அஃது பொதுவில்வைப்போம்''.

**விசாலி**

இவையெல்லாம் ஒரு கவிஞனுக்கு இருக்க வேண்டிய பரந்த மனப்பான்மையைக் காட்டுகின்றது.

பெண்ணடிமைத்தனமும், சாதீய ஒடுக்கு முறையும் பணிந்து வாழும் வாழ்க்கையும் ஆழமாகி வேரூன்றிவிட்ட உள்ளங்களின் உட்கிடக்கையின் வெளிப்பாடுதானு இப்படி இன்று எம்மத்தியில் பாரதியை ஒதுக்க வைத்தது. எமது காலத்தின் தேவைக்கேற்ப பாரதியின் பாடல்களை மக்களிடம் சென்றடையச் செய்தால் எவ்வளவு பொருத்தமாய் இருக்கும்.

இந்த நூற்ருண்டில் அதுவும் எம் மண்ணில் இப்படியென்ருல் அன்று பாரதியின் இறுதிச்சடங்கில் இருபது பேர் மட்டுமே கலந்துகொண்டதில் எந்தவித ஆச்சரியமும் இருக்கமுடியாது!

சகல விதமான ஆங்கில மருந்து வகைகளுக்கு
குறிஞ்சி மெடிக்கல்ஸ்
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

# சிறுகதை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றன. உயர் வகுப்பு மாணவர்களும் கணக்குச் செய்து பார்ப்பதற்காகவும் குறிப்பெடுப்பதற்காகவும் இதைப் பயன்படுத்துகின்றனர்.

ஜெயராமனின் மகன் ஏ. எல். வகுப்பு படிக்கிறுன். அவனின் படிப்புத் தேவைக்காகவே ஜெயராமன் இக் கழிவு பேப்பரை வாங்க வந்துள்ளான்.

''முதலாளி வர நேரமாகும்..'' சில நிமிடங்கள் மௌனமாக நின்ற ஜெயராமன்மகேசனிடம் கேட்கின்ருன்...

''எனி வந்திடுவார்''

''அவசரமாகப் போக வேண்டியிருக்கு.''

''அப்படி என்ன அவசரம்...''

''விறகைவித்துப்போட்டு.. சமையல் சாமான்கள் வாங்கிக் கொண்டு போக வேணும். புள்ளேயள் மத்தியானம் ஒண்டும் சாப்பிட்டிருக்காதுகள்...'' இப்படிக் கூறிய ஜெயராமன் திரும்பவும் சைக்கிளடிக்கு வந்துநிற்கின்ருன்.

மகேசன் ஜெயராமனேயும் அந்த விறகுக் கட்டையும் பார்க்கிருன். பளேயில் விறகைக் கட்டிக்கொண்டு புறப்பட்டால் மாடு வண்டிலே இழுப்பதுபோல் விறகை இழுத்துக்கொண்டு... எழுதுமட்டுவாழ், மிருசுவில், கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி நாவற்குழி வெளிகளைத் தாண்டி...மகேசனின் நரம்புகள் கருகுகின்றன...!

தனது இருக்கையில் இருந்த மகேசன் எழுந்து ஜெயராமனுக்கருகில் வருகின்றான்..!

''ஐயா... எந்த ஊர்...''

''என்ரை சொந்த இடம் மாதகல், அங்கை ஆமிக்காரர் வந்தவைதானே ... சகலதையும் இழந்து வந்தம்... ஆறுமாதத்தாலே என்ரை மனுசி கான்சர் வந்து செத்துப்போனு... ஐஞ்சு பிள்ளேயளும் நானும் இப்ப மானிப்பாயிலே இருக்கிறம்...''

''கழிவு பேப்பர் என்ன தேவைக்கு..''

''என்ரை மூத்தவன் ஏ. எல். படிக்கிருன். அவனுக்குத்தான்...''

வீடுவாசல் இல்லே; பெண்சாதி இல்லே; சரியான தொழிலில்லே...புள்ளேயள் பட்டினி... இதுக்குள்ளை ஒருபடிப்பா... மகேசன் தன்னைத்தானே கேட்டுக்கொள்கிருன்.

''ஐயாவுக்கு எத்தினே பொம்பிளேப்பிள்ளேயள் ...''

''கடைசி மூண்டும் பொட்டையள்...''

''மூத்ததை உருவாக்கி நல்ல இடத்திலே குடுத்துச் சீதனபாதனம் வாங்கினுல் த்ானே கீழை உள்ளதுகளேக் கரை சேர்க்கலாம்...'' மகேசன் நாட்டு நடைமுறையைக் கூறுகிருன்.

''உப்பிடியான கீழ்த்தர எண்ணம் எனக்கில்லே...'' முகத்திலே அடித்ததுபோல் ஜெயராமன் கூறுகிருன். ஜெயராமனின் முகத்திலிருந்த கனிவு கருகிவிட்டதை மகேசன் உணர்ந்துகொண்டு மீண்டும் தனது இருக்கையில் அமர்கிருன்.

சில விஞடிகள் நின்ற ஜெயராமன் சைக்கிள் ஹாண்டிலிலுள்ள சிலேப் பைக்குள்ளிருந்தஒருவாழைப்பொத்தியை எடுக்கிருன். எடுத்தவன் ரேட்டுக் கரையில் சப்பாணிகொட்டியமர்ந்து அந்த வாழைப் பொத்தியின் இதழ்களேயும் பூக்களேயும் பிரித்து நிலத்தில் போடுகிருன்...

இவன் ஏன் இப்படிச்செய்கிருன்?...மகேசனின் மனதில் பெரும் கேள்வி...!

கருஞ்சிவப்பு நிறமான இதழ்களும் பூக்களும் பிடுங்கப்பட்டு இளஞ்சிவப்பு நிறமான இதழ்களும் பிடுங்கப்பட்டு இளமஞ்சள் நிறத்தில் வெண்தாமரை மொட்டு வடிவிலான... ஓரளவு பருத்த மொட்டு...

மகேசன் கண்ணிமைக்காமல் பார்த்தபடி இருக்கின்ருன்...இந்த மொட்டை இவன் என்ன செய்யப்போகின்ருன்... மகேசனின் மனதில் அடுத்த கேள்வி...

ஜெயராமன் மொட்டுவடிவிலான அந்த வாழைப் பொத்தியை ... பனங்குருத்தைக் கடிப்பதுபோல், கடித்துச் சாப்பிடுகின்ருன்...!

பச்சை வாழைப்பொத்தி., இதைச் சாப்பிடலாமா?

மகேசன் எழுந்துவருகிருன்.

''ஐயா... வாழைப் பொத்தியைப் பச்சையா தின்னலாமா...?

''தின்னலாம்...''

''ஆர் சொன்னது...''

''ஒருதரும் சொல்லயில்லே.. ஒருநாள் விறகு கட்டிக் கொண்டு வந்தன்... சரியான பசி...கையிலே ஒருசதக் காசில்லே...வழியிலே எனக்குப் பழக்கமானதொரு வாழைத் தோட்டக்காரனேச் சந்திச்சன் அவன் வீட்டுக்குக்கொண்டு போய் வறுத்துச் சாப்பிடச் சொல்லி இரண்டு வாழைப் பொத்திகளேத் தந்தான். அதை வாங்கிக்கொண்டு வரயுக்கைதான் வறுத்துச் சாப்பிடுகிறதை சும்மா சாப்பிட்டாலென்ன எண்ட எண்ணம் வந்தது ... மேல்பக்கத்தாலே உடைச்சுக் கழிச்சுப்போட்டுச் சாப்பிட்டன்... பனங்குருத்து மாதிரி இருந்தது... நல்லாப் பசியைப்புடிக்கும்...இப்பசாப்பிட்டால் நாளேக்கு காலமை வரை பசிக்காது...'' ஜெயராமன் சர்வசாதாரணமாகக் கூறுகிருன்.

ஆனுல் மகேசன்... அவனது இதயம் வெதும்பி வெடித்து அழுகின்றது...இப்படியும் ஒரு வறுமையா...?

வறுமையைக்கண்டு வறுமை அழுகின்றது!

''ஐயா உங்களிட்டை ஒண்டு கேட்கட்டா...'' வார்த்தைகள் இதயத்தின் அடித்தளத்திலிருந்து பிரசவிக்கின்றன.

''கேளுங்கோ......

''குசுனி அடுப்புக்குள்ளே பூனே படுத்திருக்க புள்ளேயின்ரை படிப்புக்காகச் செலவழிக்கிறியளே... இப்பிடியும் ஒரு படிப்பு வேணுமா...''

உதடுகள் பிரியாதநிலேயில் ஜெயராமன் சிரிக்கிருன்... அர்த்தபுஷ்டியான சிரிப்பு!

''என்னேயா சிரிக்கிறியள்''

''தம்பி முதிரைமரம் பட்டுவிறகாகி... எரிந்து சாம்பலாகும்வரை நிமிர்ந்துதான் நிற்கும் தமிழன் இவ்வளவு பெரிய இழப்புக்களேச் சந்திச்சும் இன்னும் முதிரைமரம் போலேதான் நிற்கிறுனெண்டால்...காரணம் என்னெண்டு தெரியுமா...'' இப்படிக் கேட்ட ஜெயராமன் மகேசனேப் பார்க்கிருன்.

அந்தப் பார்வையில் கண்ணுக்குள் முள்ளெடுக்கும் ஆயுதத்தின் கூர்மை!

மகேசன் புரியாமல் நிற்கிருன்

''அதுக்கு இரண்டு காரணங்கள்...ஒண்டு தமிழன்ரை கல்வி...அடுத்தது தமிழன்ரை வீரம்..!வறுமைக்குகல்வி தீனியானுல் ... எங்கடை அடுத்த தலேமுறை அடிமைப்பட்டிடும்..'' ஜெயராமன் கூறி முடிக்கிருன்.

ஜெயராமனின் பேச்சு, போர்ப்பேரிகையாய் மகேசனின் செவிப்பறையில் அதிர்ந்துகொண்டிருக்கின்றது.

முதலாளிவருகின்ருர். கழிவு பேப்பரை வாங்கிக்கொண்டு ஜெயராமன் புறப்படுகின்ருன்.

சிறுவர் மஞ்சரி

# பதவி வரும்போது

# பணிவும் வரவேண்டும்

ஒரு காட்டில் நரியும், மானும் மிகவும் நெருக்கமான தோழர்கள், எங்கு சென்ருலும் இருவரும் ஒன்ருகத்தான் செல்வார்கள்.

ஒரு நாள் மான் கேட்டதாம்! தோழா! உனககு ஏன் நரி என்று பெயர் வைத்தார்கள்?

அதற்கு நரி சொல்லியது, எனககு நரிமூளே உள்ளதால் நரி என்று வைத்தார்கள்.

அப்போது மான் சொல்லியது, எங்களுடைய ராசா எல்லோருக்கும் விஞ, விடைப் போட்டி வைக்கபோருர், அதில் நீங்களும் கலந்துகொள்ளுங்கோவன் என்றது.

அதற்கு நரி சொல்லியது, ராசா வைத்தால் நான் போகத்தான்வேண்டும் என்றது.

ஒருநாள் ராசாவான சிங்கம் எல்லாரையும் கூப்பிட்டு கேள்வி கேட்டதும். நரிதான் எல்லா விஞக்களுக்கும் விடை அளித்ததாம்.

அதனுல் சிங்கம், நரியைப் பார்த்து ''நீ தான் எனககு அடுத்த ராசா. நீ சொலகிறதை இவர்கள் எல்லாரும் கேட்கவேண்டும்'' என்று கட்டளேயிட்டது.

ஒரு நாள் காற்றும், மழையும் புயலாக எழுந்தது. அப்போது நரி ஒரு ஆற்றைக் கடந்து அடுத்த கரைக்குப் போக நினேத்தது: அதனுல்- நரி யானேயைப் பார்த்து கட்டளேயிட்டது. ''நீ தான் பெரிய ஆள். என்னே அந்த ஆற்றின் அடுத்த கரைக்கு கொண்டுபோய் விடு''

யானே சொன்னது, நாங்கள் இந்த நேரத்தில் போனுல் எங்களுக்குத்தான் அழிவு வரும் என்று, அதற்கு நரி சொல்லியதாம், ''நான் இரண்டாவது ராசா. நான் சொல்வதை நீ செய்'' என்றது. அதனுல் யானே நரியை தன்னுடைய முதுகில் ஏற்றி ஆற்றின் அடுத்த கரையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. அப்போது மான் நரியைப் பார்த்து சொல்லியதாம், ''தோழா பதவி வரும்போது பணிவும் வரவேண்டும் நீ பெரிய மனிதர்கள் சொல்வதை கேளாது இந்த நேரத்தில் போகிருய்'' என்றது.

அதற்கு நரி சொன்னது, நான் இரண்டாவது ராசா எனக்குத் தெரியும் என்றது.

நரி – மான் சொல்லியதையும் அலட்சியம் செய்துவிட்டு நரியும், யானேயும் ஆற்றைக் கடக்கும்போது அலே மோதியதால் நரி யானேயின் முதுகில் இருந்து வழுக்கி ஆற்றில் தவறி விழுந்துவிட்டது. யானே நீந்தி, நீந்தி அடுத்த கரையை அடைந்தது. நரி ஆற்றிலே தத்தளித்து இறந்துவிட்டது.

மான் மற்றவர்களுக்கு சொல்லியது, நான் போகும்போது சொன்னேன், ''பதவி வரும்போது பணிவும் வரவேண்டும் தோழா என்று'' நான் சொன்னதை கேளாமல் அலட்சியம் செய்ததால் அவருக்கு ஏற்பட்ட அழிவு என்றது.

செல்வன்
சி. ஜெயகாந்தன்

# மனித உறுப்புக்களின் பெறுமதி

அமெரிக்காவில் மனிதனின் உறுப்புகளுக்கு அதிக விலே போகின்றது. ஒரு சிறுநீரகத்தைக் கொடுத்து ஒரு வீட்டைப் பெற்றுக்கொள்ளும் அளவுக்கு மனிதனின் அவயுவங்கள் விற்பனேயாகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 18 அடி நீளமுள்ள தலேமுடி | - | 100 | டொலர் |
| விழி வெண்படலம் | - | 4000 | '' |
| இருதயம் | - | 20,000 | '' |
| குருதி | - | 20 | '' |
| நுரையீரல் | - | 25,000 | '' |
| கல்லீரல் | - | 15,0000 | '' |
| சிறுநீரகம் | - | 50,000 | '' |
| எலும்பு மச்சை | - | 10,000 | '' |
| மனிதனின் சடலம் | | | |
| 15 மணி நேரத்துக்கு முன் | - | 50,000 | '' |
| 15 மணி நேரத்துக்குப் பின் | - | 10,000 | '' |

# இவ்வாரம் எப்படி?

04-06-95 முதல் 10-06-95 வரை

**மேடம்**
செயல்பாடுகளில் தயக்கமிருக்கும், குடும்ப ஒற்றுமை பாதிப்படையும், பணநிலே தளம்பலுண்டு, தொழில் நஷ்டமுண்டு, சிறு சம்பவங்களும் துயரம் தரும், வாக்குப் பகையுண்டு, அகம்பாவம் துன்பம் தரும், மத்திம வாரம்.

**இடபம்**
நண்பர்கள் சாதகமாக இருப்பர், திட்டங்கள் செயல்படுத்த முடியாதிருக்கும், மனமாற்றமுண்டு, எதிர்பாராத தனயோகமுண்டு, தொழிலில் அதிகாரிகள் கண்டிப்பு இருக்கும், சாதகமற்ற வாரம்.

**மிதுனம்**
வாழ்க்கையில் சுபகாரியம் கைகூடும், மனநிலே மன நிறைவைத் தரும், நண்பர் உதவியுண்டு, தொழிலில் போதிய லாபமுண்டு, பிரச்னேகளில் சாதகமற்ற நிலேயுண்டு, தேகநலம் பாதிப்படையும், நன்மை தீமை கலந்த வாரம்.

**கடகம்**
கடிதத் தொடர்பு அனுகூலத்தைத் தரும், விரோதிகளே ஜெயித்து சாதனே புரியலாம், குடும்பத்தில் வேற்றுமை நிலவும், மாமனர் நிலே மனவேதனே தரும், சகோதர உதவியுண்டு, தியாகங்கள் நிறைந்த வாரம்.

**சிங்கம்**
குடும்ப விவகாரங்களில் இனசனபகையுண்டு, எதிர்பாராத தனவிரயமுண்டு, அதிகாரிகள் துன்பமுண்டு, தொழில் மந்தநிலேயிருக்கும், முயற்சிகள் தாமதமாகும், அன்னியர் ஒருவரை பகைத்துக்கொள்ளலாம், அமைதி குன்றிய வாரம்.

**கன்னி**
பயனுள்ள சந்திப்பு நிகழும், கல்வியில் முன்னேற்றத்திற்கு வழியேற்படும், குடும்பத்தில் சந்தோஷம் நிலவும், தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிட்டாது, சுபகாரியங்கள் மகிழ்ச்சி தரும், உடல் நலம் சிறப்பாக இருக்கும், மகிழச்சியான வாரம்.

**துலாம்**
குடுபத்தில் மகிழ்ச்சியுண்டு, சுபகாரியங்கள் நிலவும். கௌரவம் கிட்டும், தொழிலில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும். நண்பரின் செயல் பெருமை தரும், அதிகாரிகள் ஒத்துழைப்பு தருவர், பணநிலே சிறப்பாக இருக்கும், அதிர்ஷ்ட வாரம்.

**விருச்சிகம்**
தொழிலில் அசமந்த போக்கு நிலவும், குடும்பத்தில் விரிசலுண்டு, பிரச்னேகள் முடிவுக்கு வராது, வைத்திய செலவுண்டு, இனசன பகையுண்டு, பெற்ருேர்கள் பொறுப்புண்டு, கடன்கள் சுமை தரும், அமைதியற்ற வாரம்.

**தனுசு**
தொழில் அமைதிக்குறைவு, புதிய பொறுப்புக்களால் மனச்சோர்வு நிலவும். வாழ்வில் வீண் கவலேகள் உருவாகும். நம்பி ஏமாறவேண்டி வரும். பணக் கஷ்டமுண்டு. மனதில் அமைதி குன்றிய வாரம்.

**மகரம்**
தொழிலில் பகைமை நிலவும், எதிர்பாராத பயணம் கவலேதரும். செலவினம் அதிகமாகும். குடும்பத்தில் அமைதி குன்றி காணப்படும். எதிரிகள் செயல்கள் ஆத்திரத்தைத் தோற்றுவிக்கும், நன்மைகள் குன்றிய வாரம்.

**கும்பம்**
முயற்சிகளில் அனுகூலமுண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டு. தொழிலில் பாராட்டு கிட்டும், பணநிலே உற்சாகமிருக்கும், வெளியார் உதவிகள் கிட்டும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மனமகிழ்ச்சிமிக்க வாரம்.

**மீனம்**
கவலேகள் குறையும். தடைப்பட்ட காரியங்கள் நிறைவேறும் குடும்ப வாழ்வில் நிம்மதி இருக்கும். நலக்குறைவு இருக்கும். இடமாற்றம் நன்மைதராது. பணநிலே குன்றியே காணப்படும். சுமாரான வாரம்.

கணிப்பு: ஜோஸ்யர்

★ பட்டுக்குடை ★ ஆலவட்டம்
★ கொடி ★ வாகமாலே
அனேத்தையும் ஒரே இடத்தில் பெற்றுகொள்ள
ஞானம் ஆடையகம்
34, சோதியாதெரு, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(ஏ 4968)

நல்லூர் கிளை நூலகம்.



# 120 ஐ. நா. சமாதானப் படையினரை பொஸ்னிய சேர்பியர் விடுவித்தனர்

(லண்டன்)

பொஸ்னியா சேர்பியர்கள் தாம் பிணையாகப் பிடித்து வைத்திருந்த 120 ஐ. நா. அமைதிப்படையினரை விடுவித்துவிட்டனர்.

ஒரு வாரமாக இந்த 120 பேரையும் பிணையாட்களாக பொஸ்னியா சேர்பியர் வைத்திருந்தனர்.

அதிபர் ஸ்லாவோ கோஸ்மியோசோவிச் விடுத்த வேண்டுகோளை அடுத்து ஐ. நா. பிணையாட்கள் சேர்பியர் அரசிடம் ஒப்படைக்கப்பட்டதாக பெல்கிரேட் தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

பொஸ்னியா சேர்பியரிடம் எஞ்சியுள்ள 250 ஐ. நா. படையினரைப்பற்றிய தகவல் எதுவும் தெரியவில்லை.

ஐ. நா. பிணையாட்கள் அனைவரும் அடுத்த இரண்டு நாட்களில் விடுவிக்கப்படுவார்கள் என்று பொஸ்னியா சேர்பியர்கள் உறுதி கூறிய தாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே நேற்றுமுன்தினம் பகல் மேலும் 60 அமைதிகாக்கும் படையினரை பொஸ்னியா சேர்பியர்கள் பிடித்து வைத்துக்கொண்டதாக ஐ. நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்,

மற்றொரு சம்பவத்தில் எவ் 16 ரக அமெரிக்க ஜெட் விமானம் ஒன்றை சேர்பியர்களின் ஏவுகணை ஒன்று சுட்டுவீழ்த்தியது.

பொஸ்னியாவின் மேலே விமானங்கள் பறக்கக்கூடாது என்று விதிக்கப்பட்ட தடையைச் செயற்படுத்தும் நேட்டோவின பணியில் அந்த விமானம் ஈடுபட்டிருந்தது. (இ)

# விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் உத்தரவை மீறுவோர் தண்டனை பெறுவர்

(கொழும்பு)

விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விடுத்துள்ள கட்டளைகளுக்கு இசைவாக நடந்து கொள்ளாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

விசேட ஜனாதிபதி ஆணைக்குழு சட்டத்தில் இதற்கான ஏற்பாடுகள் உள்ளன.

வெளிநாட்டிலிருக்கும் எந்த நபரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் சமுகமளிக்குமாறு விடுக்கப்பட்ட அறிவித்தலை அல்லது அழைப்பினை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அவரை நாடு கடத்துவதற்கு அரசாங்கங்களுக்கிடையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

நீதிஅமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இத்தகவலை தெரிவித்துள்ளார்.

துஷ்பிரயோகங்கள் முறைகேடுகள் குறித்து விசாரணை செய்துவரும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு நிதிஅமைச்சின் முன்னாள் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கத்துக்கு அழைப்பினை விடுத்திருக்கிறது.

ஆயினும் திரு. பாஸ்கரலிங்கம் வெளிநாட்டில் இருப்பதால் இம்மாதம் 13ம் திகதிக்கு முன்னர் அவருக்கு இந்த அழைப்பினை விடுப்பது சிரமமாகஉள்ளது என்று பதில் சட்டமா அதிபர் டக்ளஸ் பிரேமரட்ன ஆணைக்குழுவிடம் தெரிவித்திருந்தார்

இதனைத் தொடர்ந்து இம்மாதம் 30ம் திகதிவரை கால நீடிப்புசெய்யப்பட்டிருக்கிறது.

திரு. பாஸ்கரலிங்கம் தங்கியிருக்கும் இடம்பற்றி ஆணைக்குழுவுக்கு தெரியுமென ஆணைக்குழுவின் செயலாளர் என். ஒபடகே தெரிவித்துள்ளார்.

லண்டனிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியோடு அவருக்கு அழைப்பினை அனுப்பவேண்டுமென அவர் கூறினர். -இ

## காலியில் இருபது

[1ம் பக்கத்தொடர்ச்சி]

வேடிக்கை பார்த்துள்ளனர். இதனால் காடையர்கள் தமது தீச்செயலை தொடர்ந்துள்ளனர். கடைகள் யாவும் தீக்கிரையான பின்பே அங்கு மேலதிக படையினர் வந்துள்ளனர்.

அங்கு வந்த படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும் வெடிக்கவைத்துள்ளனர். இதையடுத்து அப்பகுதியிலிருந்து சிங்களகாடையர் அகன்றுள்ளனர்;

இதேவேளை தெற்கில்பலத்த மழை பெய்ததால் தீவைப்புச் சம்பவங்களோ, கலவரமோ மேலும் தூண்டப்படும் சாத்தியம் குறைந்துவிட்டதாக ஏ. எவ். பி. செய்தி தெரிவித்தது. சம்பவத்தையடுத்து நேற்றுக் காலை 5 மணி முதல் காலிப் பகுதியில் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவை அரசு பிறப்பித்ததுடன் அங்கு பாதுகாப்பு நடவடிக்கைககாக மேலதிக துருப்பினரையும் அரசு அனுப்பி வைத்தது.

### நிலைமை கட்டுப்பாட்டில்

இதேவேளை காலி நகரில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற தீவைப்புச் சம்பவத்தின் பின்னர் அங்கு பூரண அமைதி நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தீவைப்புச் சம்பவத்தை அடுத்து காலியில் நிலவும் பதற்ற நிலையை தணிக்க சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தென் மாகாண ஆளுநர் நெவில் கனகரட்ண தலைமையில் இது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இந்த பிரதேசப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கென நடமாடும் பொலிஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காலி கலுவெகுல பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர். பிரதான வீதி கங்கெதர பிரதேசத்தில் கடற்படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காலி தோட்டப் பகுதியில் பொலிசார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவேண்டும் என்று கல்வி, உயர் கல்வி அமைச்சர் றிச்சார்ட் பத்திரான கேட்டுள்ளார். -சி-கி-ம-ரி

## நாட்டின் வரலாறு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பல மாற்றங்கள் செய்தது 1848ல் 2-வது பிரஞ்சுக் குடியரசுப் பிரகடனம் இடம்பெற்றது. முதலாம் உலகப் போரைத் தொடர்ந்து 3-வது பிரஞ்சுக் குடியரசு உருவானது.

24-12-1946ல் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டதுடன் 4-வது குடியரசும் உருவானது. 13-12-1960ல் பிரான்ஸ் தனது முதல் அணுகுண்டு பரிசோதனையை சஹாரா பாலைவனத்தில் நடாத்தியது.

—ந. பரமேஸ்வரன்

## கிளைகள் இடமாற்றம்

[அச்சுவேலி]

அச்சுவேலிப்பகுதி ராணுவ நடவடிக்கையை அடுத்து வலி-கிழக்கு வடபகுதி [அச்சுவேலி] பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தில் சிலகிளை நிலையங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றப் பட்டுள்ளன, 74-கி

## கொழும்புப்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு மணித்தியாலங்களின் பின்பு காடுகளிலிருந்து எதுவித காயமுமின்றி இராணுவத்தினர் வரத்தொடங்கிய பொழுதுதான் இவர்கள் பாதுகாப்புக் கடமையைச் செய்யாது ஓட்டம் பிடித்துள்ளார்கள் என்பது தெரியவந்தது.

### ‘சண்டே ரைம்ஸ்’ இராணுவ பத்திரிகை நிருபர்

பாதுகாப்பு பிரதியமைச்சர் அனுருத்த ரத்வத்த அனுராதபுரத்தில் இராணுவ உயரதிகாரிகளுடன் ஒரு மகாநாடு நடத்தினர். ஒரு குறுகிய கால எல்லைக்குள் விடுதலைப் புலிகள் பலத்துடன் இருக்கும் பிரதேசத்தைக்கைப்பற்றுவதற்கு அவர்கள் தயாரா எனக் கேட்டார். முதலில் பதிலளித்த மேஜர் ஜெனரல் ஏ. எம். யு. செனிவரத்ன, யாழ்ப்பாணத்தை ஒரு குறுகிய கால அவகாசத்தில் ஏன் கைப்பற்றுவது கடினம் என்பதை விளக்கினர். இதே கருத்தை மேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்காவும் பகர்ந்துகொண்டார். கடல் மார்க்கமாகவும் தரை மார்க்கமாகவும் யாழ்ப்பாணத்தில் முன்னேற முயல்வது பொஸ்னியா போன்றதொரு இக்கட்டான நிலைமையை உருவாக்குமெனக் கருதினர்கள். கட்டிடம் கட்டிடமாகப்பிடிக்க வேண்டியிருக்கும். பெருந்தொகையான இராணுவத்தினரை இழக்கவேண்டியிருக்கும். காயமடையும் இராணுவத்தினரை வெளியேற்றுவது கடினமாகவிருக்கும் எனக் கருதினர்கள்.

இவர்களது கருத்துக்களைக் கேட்ட பிரதியமைச்சர் சீற்ற முற்ருர் முடியாது என்பவர்கள் முடியும் என்பவர்களுக்கு இடமளிக்கவேண்டும் எனக் கூறி மறுநாளே இராணுவக் கட்டமைப்பில் மாற்றங்களைச் செய்தார் தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவிருந்த செனிவரத்ன முக்கியமற்ற வொலன்ரியர்ஸ் பிரிவுக்கு மாற்றப்பட்டார். அவரது இடத்துக்கு அண்மையில் ரஷ்யாவில் தளபாடக் கொள்வனவுக்காகச் சென்று திரும்பியமேஜர் ஜெனரல் ஜெகான் தழுவத்த நியமிக்கப்பட்டார். கொப்பேகடுவ போல களுவத்த திறமை மிக்கவரென்றும் கோரப்படும் அரசியல் நோக்கத்தை இராணுவ நடவடிக்கைமூலம் ஈட்டிக்கொடுப்பாரென்றும் ரைம்ஸ் பத்திரிகை இராணுவ நிருபர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# இலங்கைக்கு விதிக்கப்பட்டிருந்த ஆயுத கொள்வனவு தடையை சில நாடுகள் நீக்கிவிட்டன

(கொழும்பு)

ஆயுத கொள்வனவு செய்வதுதொடர்பாக இலங்கைக்கு விதித்திருந்த தடைகளை சில வெளிநாடுகள் நீக்கியிருக்கின்றன. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தத் தடையை நீக்கி இலங்கைக்கு உதவமுன் வந்திருக்கும் நாடுகளின் விபரங்களை வெளியிட அமைச்சர் கதிர்காமர் மறுத்துவிட்டார்,

இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்திருக்கும் வெளிநாட்டு நிருபர்களின் கேள்விகளுக்கு அமைச்சர் கதிர்காமர் பதிலளிக்கையில் இதுபற்றி மேலும் கூறியதாவது:

இலங்கைக்குத் தேவையாக இருப்பது உதவியல்ல, ஆனல் இலங்கை அரசாங்கம் தனக்குத் தேவையான இராணுவ சாதனங்களை கொள்வனவு செய்யக்கூடியதாக இருப்பதுதான் அவசியமாகுமென்று அமைச்சர் கூறினர்.

இந்த இராணுவ சாதனங்களைக் கொள்வனவு செய்யமுடியாமல் சில அரசாங்கங்கள் மிக சமீபகாலம்வரை தடுத்து வந்திருந்தன. தற்போது இந்தத் தடைகள் குறைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக இலங்கைக்கு இதுவரையில் கிடைக்காத வாய்ப்புக்கள் கிடைக்கவிருக்கின்றன.

மேற்கு நாடுகளின் அரசாங்கங்கள் தமது தலைநகரங்களிலுள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகங்களை மூடினல் அது இலங்கைக்கு விருப்பமாக இருக்கும் என்று கூறியதாக வெளிநாட்டு அமைச்சின் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

ஆனல் இந்தக் குழுக்கள் மேற்கு நாடுகளின் குற்றச் செயல்களில் ஈடுபடாத வரையில் அத்தகைய நடவடிக்கை எடுக்க தமது நாட்டு சட்டங்கள் அனுமதிக்கவில்லையென்று இந்த நாடுகள் கூறியிருக்கின்றன எனவும் அமைச்சர் கதிர்காமர் தெரிவித்துள்ளார். -இ

## ராஜீவ் கொலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புக்கு அனுப்பியுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன், இந்த இயக்கத்தின் உளவுப்பிரிவுத் தலைவர் பொட்டுஅம்மான், மகளிர் பிரிவுத் தலைவி அகிலா ஆகிய மூவரையும் ராஜீவ் காந்தி கொலை வழக்கு சம்பந்தமாக தம்மிடம் ஒப்படைக்கும்படி இந்தியா முறைப்படி இலங்கையிடம் முதல் தடவையாகக் கோரியுள்ளது.

இந்தியா அதிகாரிகள் நேற்று கொழும்புக்குச் சென்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமரிடம் மேற்படி வழக்கின் கோவைகளையும், இந்திய அரசின் கோரிக்கையையும் கையளித்தார்கள்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் முக்கிய அம்சங்களைத் கவனித்துவரும் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் இதுபற்றி மக்களவையில் நேற்று கூறுகையில்; திரு. பிரபாகரன், திரு. பொட்டுஅம்மான், அகிலா ஆகிய மூவரும் தலைமறைவாக யாழ்ப்பாணத்தில் இருப்பதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது. மேற்படி வழக்கில் மொத்தம் 26பேர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தலைமறைவாகியுள்ள இந்த மூவரின் வழக்கும் தனியாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

134 பேர் இதுவரை இவ் வழக்குத் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்; ஏராளமான ஆவணங்கள் இவ் வழக்கு சம்பந்தமாக சேர்க்கப்பட்டுள்ளன.

இந்திய, இலங்கை சட்டங்களை நன்கு ஆராய்ந்ததன் பின்னரே பிரபாகரனை நாடு கடத்துமாறு கோருவதென அரசாங்கம் தீர்மானித்தது.

சட்டப் பிரச்னையை இந்தியா கவனமாக பரிசீலனை செய்தது. இந்தியாவினதும் இலங்கையினதும் சாட்சியங்களை பயன்படுத்த முடியும் என அரசாங்கம் முடிவு செய்தபின்னர், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூன்று தலைவர்களையும் கைது செய்து, நாடு கடத்துமாறு கேட்பதென அரசாங்கம் தீர்மானித்தது என்றும் அமைச்சர் சிதம்பரம் தெரிவித்தார்.

இதேவேளை நாடுகடத்தி ஒப்படைக்கும் நடவடிக்கை குறித்து இந்தியா-இலங்கையுடன் ஒப்பந்தங்கள் எதையும் செய்யவில்லை. 1988ம்ஆண்டு பயங்கரவாத ஒடுக்குச் சட்டம் பற்றிய ‘சார்க்’ பிராந்திய கோட்பாட்டை கருத்தில் கொண்டே இந்த நாடு கடத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் ‘இந்திய வானொலி’ தெரிவித்தது.

(விம ஜி)

## திருமலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பலியானதுடன் 12 பேர் காயமடைந்தனர்.

இத்தாக்குதல் நேற்று முன்தினம் காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்றது, -ரி கி-சி


## அறிவித்தல்

தமிழீழ மாவட்ட நீதிமன்று யாழ்ப்பாணம்.

பரமேஸ்வரன் பெண் கலாரஞ்சினி,
திருநெல்வேலி.

வழக்காளி

வழ. இல:-ம.நீ/177/95

செல்லத்துரை
பரமேஸ்வரன்,
பால்பண்ணை
வயிரவ கோவிலடி,
கோப்பாய்.
தற்போது இந்தியா.

எதிராளி

இத்தால் சகலருமறிக, மேற்குறித்த வழக்காளி மேற்குறித்த எதிராளிக்கெதிராக இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார், என்றும் இவ்வழக்கில் அக்கறையுள்ள ஆள் எவரேனும் ஏதும் ஆட்சேபனை இருப்பின் 15-06-1995 திகதி காலை 9-00 மணிக்கு சமூகமளித்து தெரிவித்துக் கொள்ளலாம். என்றும் அவ்வாறு ஆட்சேபனை ஏதும் தெரிவிக்காத பட்சத்தில் இவ்வழக்கு ஒருமுகமாக விளங்கி வழக்காளி கேட்டபடி தீர்ப்பளிக்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

01-06-1995,
யாழ்ப்பாணம்.

மன்றின் கட்டளைப்படி

பதிவாளர்,
தமிழீழ மாவட்ட
நீதிமன்று,
யாழ்ப்பாணம்.

(சி-1505)

யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்.

# பாரிய படை நடவடிக்கைக்கு திட்டமிடுமாறு அரசு உத்தரவு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பாரிய இராணுவ நடவடிக்கைகளை திட்டமிடுமாறு முப்படை நடவடிக்கைக்கு தளபதியும் இராணுவ தலைமை அதிகாரியுமான மேஜர் ஜெனரல் ரோஹான் தளுவத்தைக்கு சிறிலங்கா அரசு கட்டளையிட்டுள்ளது.

வடக்கு கிழக்கு முப்படை நடவடிக்கைக்கு தளபதியாக கடந்த செவ்வாய்க்கிழமை அனுராதபுரத்தில் பதவி ஏற்ற தளுவத்தைக்கு இவ் உத்தரவு இடப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்கு கிழக்குப் போரில் முக்கிய பங்காற்றும் நான்கு பட்டாலியன் இராணுவ கொமாண்டோக்களுக்கும் மூன்று பட்டாலியன் விமானப்படை இராணுவ துருப்புக்களுக்கும் பொறுப்பியல் துருப்புகளுக்குமான தளபதியாக பிரிகேடியர் பீரிஸ் பதவியேற்றுள்ளார்.

இவர் விரைவில் மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப் படவுள்ளார். [ரி சி]

# திரியாய் மோதலில் 12 புலிகள் வீரச்சாவு

(திருகோணமலை)

திருகோணமலை திரியாய் காட்டுப் பகுதியில் நேற்றுமுன் தினம் இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற மோதலில் 12 போராளிகள் வீரச்சாவடைந்தார்கள்.

கப்டன் கமல் (பாலசுப்பிரமணியம் சிவக்குமார் - வவுனியா), கப்டன் சிவன் (ஏகாம்பரம் திவாகரன்-மாங்குளம்), லெப். மனோகரன் (குழந்தைவேல் பத்மநாதன் - மட்டக்களப்பு), லெப். இனியவன் (காசி இராசலிங்கம் ஞானலிங்கம் - யாழ்ப்பாணம்), 2ம் லெப். பிலேந்திரன் (குலசேகரம்பிள்ளை சிவசேகரன்-கிளிநொச்சி), 2ம் லெப். தேவன் (சிவானந்தன் இந்திரன்-யாழ்ப்பாணம்), 2ம் லெப். குபேரன் (கணேசமூர்த்தி குமாரலிங்கம் - திருகோணமலை), வீரவேங்கை நிலகண்டன் (சுந்தசாமி அமுதன்-யாழ்ப்பாணம்) வீரவேங்கை காங்கேயன் (சிங்கராசா அழகன்-யாழ்ப்பாணம்), வீரவேங்கை கம்பன் (இராசநாயகம் பிருங்கிலி-யாழ்ப்பாணம்), வீரவேங்கை செந்தமிழன் (சுபாபதி உமாகரன்-யாழ்ப்பாணம்), வீரவேங்கை அச்சுதன் (சந்திரமோகன் சத்தியபவான்-முள்ளியவளை) ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தவர்களாவர். -வி-சி

# காணாமல்போனோர் பற்றிய விசாரணையில் பத்திரிகைகளுக்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

காணாமல்போனோர், கடத்தப்பட்டோர் பற்றிய விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு பத்திரிகையாளர்களை அனுமதிப்பதில்லை என அரசு முடிவெடுத்திருக்கிறது.

மத்திய மாகாணத்தில் காணாமல்போனோர் பற்றிய விசாரணைகள் மகியங்கனையில் நடைபெறவுள்ளது. இவ்விசாரணைகளின்போது தொடர்பு சாதனத்துறையினரோ அல்லது பொதுமக்களோ பார்வையாளர்களாகக் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலிருந்து காணாமல்போனோரில் பலர் படையினராலே கொண்டு செல்லப்பட்டிருந்ததாகவும், அவர்கள் காணாமற்போனதற்கு படையினரே பொறுப்பு என சந்தேகிப்பதாகவும் காணாமல் போனோரின் பெற்றோரும், உறவினர்களும் தமது சாட்சியங்களில் தெரிவித்திருந்தனர்.

இவ்விசாரணைச் செய்திகள் பத்திரிகைகளில் தொடர்ச்சியாகவெளியிடப்பட்டுவந்தன. இதனால் மனித உரிமை அமைப்புக்கள் அதிர்ச்சிக்குள்ளாகி இருந்தமையும். அவ் அமைப்புக்கள் படையினரின் நடவடிக்கைகள் குறித்து அதிருப்தி அடைந்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (கி சி)

பலத்த பாதுகாப்புடன்

# திம்புலாகல தேரரின் இறுதிக்கிரியைநடைபெற்றது

(கொழும்பு)

திம்புலாகலபகுதியில் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்ட சீலாலங்கார தேரரின் இறுதிக் கிரியைகள் நேற்று மாலை பலத்த பாதுகாப்பின் மத்தியில் பூரண அரச மரியாதைகளுடன் நடைபெற்றது.

இதனையொட்டி நேற்றும் நேற்றுமுன்தினமும் திம்புலாகல பகுதியில் ஆயிரக்கணக்கான படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

நேற்று நடைபெற்ற தேரரின் இறுதிக் கிரியையில் ஆயிரக் கணக்கான மக்கள் பங்குபற்றினர்கள் என்றும் எனினும் அங்கு எதுவித அசம்பாவிதங்களும் நிகழவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

# உணவுக்கப்பலில் தபாலை அனுப்ப தொடர்ந்து மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்லும் கப்பலில் தபால் பொதிகளை எடுத்துச் செல்வதற்கு தபால் தொலைத் தொடர்பு அமைச்சு அனுமதி வழங்கியும் பாதுகாப்பு அமைச்சு தபால்களை கப்பலில் கொண்டுசெல்வதற்கு முட்டுக் கட்டைபோட்டு வருகிறது.

தற்சமயம் கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் தபால்களை கப்பலில் அனுப்பி வைப்பதற்கான முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றபோதும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை.

இதுகுறித்து அரசாங்க அதிபர் பாதுகாப்பு அமைச்சு தபால் தொலை தொடர்பு அமைச்சு அதிகாரிகளையும் சந்தித்து பேச்சுக்கள் நடத்தியுள்ளார். [170-சி]

தெற்கில்

# நேற்று கடும்மழை

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளிலும் நேற்று கடும்மழை பெய்ததாக கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்திருக்கிறது.

குறிப்பாக மேல் மாகாணம், வடமேல் மாகாணம், மாத்தளை ஆகிய பகுதிகளில் நேற்று கடும்மழை பெய்துள்ளது. காலியிலும் நல்லமழை பெய்ததாகவும், கொழும்பின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது. க-சி

நீயை எறிபவன்
பகைவன் என்றால்
திசையைக்காட்டி விடுபவன்
உளவாளி!
உடலுக்குள் நோயென்று
ஒளிக்காதீர்
கிருமியை ஒளிக்காமல்
குருதிச்சோகை மாறுது

## இனக்கலவரத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மென ஜனாதிபதி சந்திரிகா வேண்டுகோள்விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் காலி நகரில் தமிழரின் கடைகள் எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டதைக் கண்டித்து ஜனாதிபதி சந்திரிகா விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அரசாங்கம் பொலிசாரின் உதவியோடு ஒருமணித்தியாலத்துக்குள் நிலைமையைப் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இந்தச் சம்பவத்துக்கு பின்னணியில் இருந்த சக்திகள் அல்லது தனிநபர்கள் பற்றிய தகவல்களை பொதுமக்கள், பொலிசாருக்கு அல்லது அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்கவேண்டும்.

இனக் கலவரங்களை உருவாக்குவதன் மூலம் குறுகிய அரசியல்லாபம் பெறும் நோக்கத்துடன் எதிரணியில் உள்ள ஒரு முக்கிய கட்சி இந்தச் சம்பவத்தை திட்டமிட்டு நடத்தியதென்பது தெளிவாகின்றது. எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களை தூண்டிவிடும்நோக்கத்துடன் செய்தித்தாள்களில் அறிக்கைகளை விடுத்திருந்தார்கள்.

தென்பகுதி மக்களை தூண்டிவிட்டு, நாட்டில் பதட்டத்தை உருவாக்கி 1983ம் ஆண்டு ஆடிக் கலவரச் சம்பவங்களை மீண்டும் நிகழச்செய்து நாட்டில் இரத்தக்களரியை ஏற்படுத்தி நாட்டையும் மக்களையும் அழிவுக்குள் தள்ளுவதற்கு தெற்கிலுள்ள மக்களை தூண்டிவிட சதிகாரர்கள் முயற்சி செய்து வருகின்றார்கள் என்பது தெளிவு.

பிரிவினைகோரும் தீவிரவாதிகளின் குறிக்கோள்களை ஊக்குவிக்கும் நோக்கோடு சீர்குலைவுச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு கடும் நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கம் பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் பணித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். ம-சி

# இந்தியா ராணுவ உதவிகளை இலங்கைக்கு வழங்ககூடாது

(சென்னை)

''இலங்கையின் இனப்பிரச்னையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இந்தியா இராணுவ உதவிகளை, இலங்கை அரசுக்கு ஒருபோதும் வழங்கக்கூடாது''

இவ்வாறு தீர்மானம் ஒன்று தற்போது தமிழ்நாட்டில் நடைபெற்றுவரும் தி. மு. க. பொதுக்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது, திரு. மு. கருணாநிதி தலைமையில் நடைபெறும் மேற்படிக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சில வருமாறு:

தி, மு' க கோரிக்வக

இலங்கையின் இனப்பிரச்னை தீர்வுக்காக. இந்தியா இராணுவ உதவிகளை வழங்கினால் அங்கு தற்போதுள்ள நிலைமை மேலும் மோசமடைந்தவிடும் இலங்கை அரசு விரும்பினால் இந்தியா தனது ஆலோசனைகளை வழங்கலாம், இதை விடுத்து இராணுவ உதவிகளை எச்சந்தர்ப்பத்திலும் வழங்கக் கூடாது,

இந்திய இராணுவ தலையீடு பிரச்னையை மேலும் மோசமாக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது: -வி-சி

# இந்தியப் படை வருமானால் அது ராவுக்கு ஆதாயம்?

(கொழும்பு)

இந்தியப் படைகள் மீண்டும் இலங்கைக்கு வருமானால் பிரதமர் நரசிம்மராவுக்கு ஆதாயமாக இருக்கும் அது எந்த விதத்திலும் இலங்கை இனப் பிரச்னைக்கு உதவுவதாக அமையாது என்று ஏ. எப். பி செய்தியாளர் அமல் ஜயசிங்க பி. பி சி. சிங்கள சேவைக்கு அளித்த அரசியல் கண்ணோட்டத்தில் தெரிவித்தார்.

## கொழும்பு

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பெருமளவில் வாழும் பகுதிகள் எங்கும் பெருமளவு கடற்படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை அனுராதபுரம், கம்பஹா உட்பட தெற்கில் பல பகுதிகளிலும் தீவிர பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. -சி

## கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்திகள் வந்ததைத் தொடர்ந்து தமிழ் மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவி வருகிறது. நேற்று பெருமளவு தமிழர் வீடுகளிலேயே முடங்கிக் கிடந்தனர். அடுத்த சில தினங்களுக்கு கொழும்பிலும் பெரும் பதற்றம் நிலவும் சாத்தியம் இருப்பதாகவும் கூறப்படுகிறது. -சி

# ரணில் மறுப்பு

[கொழும்பு]

நாட்டில் இனக்கலவரத்தை தூண்ட முக்கிய எதிர்க்கட்சி முயல்வதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்த குற்றச்சாட்டை எதிர்க்கட்சி தலைவரும், ஐ. தே. க.வின் தலைவருமான திரு. ரணில் விக்கிரமசிங்க மறுத்துள்ளார். [சி]

# பால்டிக் கடலில் 29 தமிழர் மீட்பு

(லண்டன்)

பால்டிக் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த 29 இலங்கைத் தமிழரை சுவீடிஷ் கடற்படையினர் மீட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது, சிறிய வள்ளம் ஒன்றில் சட்டவிரோதமாக சுவீடனுக்குள் நுழைய முயன்ற இவர்கள் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தபோதே மீட்கப்பட்டதாக பி. பி. ஸி தெரிவித்தது. (சி)

★ திருமண முகூர்த்த பட்டுப்பிடவைகளின் வண்ணக்களஞ்சியம். அதி அற்புதமான புதுப்புது டிசைன்களை தெரிவு செய்ய நாடுங்கள்.

இளவரசி சேலைசோலை

57, சிறப்பு அங்காடி
( உள்புறம் ) யாழ்ப்பாணம்.

(ஏ-4965)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1995-ம் ஆண்டு யூன் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence number B / 1633613.